A/L 87
DAY CLASSES
ஆரம்பமாகிவிட்டன.
A/L 88 ஆண்டுக்கான
சனி-ஞாயிறு வகுப்புக்கள்
ஆரம்பம்: 7 - 2 - 87
விவரங்களுக்கு:
உயர் கலைக் கல்லூரி
ஆனைப்பந்தி,
யாழ்ப்பாணம்,

Registered as a Newspaper

உதயன்

உண்மை – அஞ்சாமை – நடு நிலைமை

விலை ரூ-1/-

G.A.Q 88ஆம் ஆண்டு
புதிய வகுப்புகள்
G.A.Q 87ஆம் ஆண்டு
மீட்டல் வகுப்புகள்
B.A. 87ஆம் ஆண்டு
புதிய வகுப்புகள்
விவரங்களுக்கு:
உயர் கலைக் கல்லூரி
ஆனைப்பந்தி,
யாழ்ப்பாணம்,

சுடர்: 2 யாழ்ப்பாணம் அக்ஷய ஸ்ரீ தை மீ 21 உ செவ்வாய்க்கிழமை ஹிஜ்ரி 1407 ஜமா ஆகிர் பிறை 4 (03 02-1987) UTHAYAN A LIVELY TAMIL DAILY கதிர் 58

வாகனப் போக்குவரத்து தடைக்கு அரசு முஸ்தீபு?

உதிரிப்பாகங்கள், கம்பிகள் வடக்கே வராது தடுத்து வைப்பு

யாழ்ப்பாணம், பெப்ரவரி 3

வடக்கில் வாகனப் போக்குவரத்தை தடைசெய்யவும் அரசாங்கம் முன்னேற்பாடுகள் செய்துவருவதாக அறியப்படுகிறது.

அதன் முன்னேடியாக வாகனங்களுக்குத் தேவையான உதிரிப் பாகங்கள், கம்பி வகைகள் என்பனவற்றைக் குடாநாட்டுக்குள் கொண்டுவராது ஆனையிறவில் தடுத்து வைக்கப்பட்டுள்ளது.

குடா நாட்டுக்கான எரிபொருள் தடையை அமுலுக்குக் கொண்டு வந்ததன் பின்னர் அரசாங்கம், அலுமினியத் தடை, தொலைபேசித் துண்டிப்பு என்பனவற்றையும் நடைமுறைப் படுத்தியது.

நேற்று முதல் வாகனங்களுக்குத் தேவையான சகல உதிரிப் பாகங்கள், உருக்குக்கம்பிகள், இரும்புக் கம்பிகள் என்பனவற்றையும் குடாநாட்டிற்குள் கொண்டுவரவும் இராணுவம் தடை விதித்துள்ளது.

பல லொறிகளில் ஏற்றப்பட்டு வந்த வாகனங்களுக்குத் தேவையான உதிரிப்பாகங்கள், சைக்கிள் உப உறுப்புகள், இரும்புக்கம்பிகள், வாகனங்கள் திருத்துவதற்கு பயன்படும் ஸ்குறுறைவர் முதற்கொண்டு சகல கருவிகளும் உபகரணங்களும் ஆனையிறவுத் தடை முகாமில் பறிமுதல் செய்யப்பட்டுள்ளன. தொடர்ந்தும் குடாநாட்டுக்குள் வரும் பால் மாப் பொருள்களையும் மருந்து வகைகளையும் தடைசெய்யப்போவதாகவும் சிப்பாய்கள் எச்சரிக்கை செய்துள்ளனராம்.

இதற்கிடையில் முகாமில் தடுத்து வைக்கப்பட்டுள்ளபொருள்களைமீட்டு (4ஆம் பக்கம் பார்க்க)

முச்சந்தி முனி



சோதனை மேல்சோதனை போதுமடா சாமி எண்டு தமிழர் தன்ரை காலடிக்கு வருகினம் எண்டு நினைச்சுத் தான் உவை உந்த ஆட்டம் எல்லாம் ஆடுகினமோ......!

★ பெற்றோல் விலை உச்சம்!

யாழ்ப்பாணம்,பெப்.3

யாழ்ப்பாணத்தில் நேற்று பெற்ரோல் போத்தல் நூறு ரூபாவாக விற்கப்பட்டது மாலையில் விலை 90 ரூபாவாக குறைந்திருந்தது

நேற்று முன்தினம் 40 ரூபா, 45 ரூபா விற்ற பெற்ரோல் நேற்று திடீர் என உயர்ந்ததால் குடாநாட்டில் வாகனச் சொந்தக்காரர்கள் இக்கட்டான நிலைக்குள் தள்ளப்பட்டனர்.

தென் இலங்கையில் இருந்து எரிபொருள் ஏற்றிவந்த நான்கு லொறிகள் மதவாச்சி இராணுவ முகாமில் தடுத்து வைக்கப்பட்டதன் காரணமாகவே இந்த விலையுயர்வு என்று தெரிவிக்கப்பட்டது. (இ-10)

தீ விபத்து

கோலாலம்பூர் பெப் 3

கோலாலம்பூரில் நேற்று இடம்பெற்ற தீ விபத்து ஒன்றில் 140 வீடுகள் வரை எரிந்து சேதம் அடைந்தன. (இ)

பல்கலைக்கழக ஆசிரியர் போராட்டம் வாபஸ்

கொழும்பு,பெப்3

நிர்வாக பதவிகளை இராஜினாமாச் செய்த பல்கலைக்கழகப் பேராசிரியர்கள் மேற்கொண்ட தொழிற்சங்க நடவடிக்கையை விலக்கிக் கொள்வது என்று நேற்றுநடைபெற்ற பல்கலைக்கழக ஆசிரியர் சம்மேளனக் கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டது.

இது சம்பந்தமாக சம்மேளனம் நேற்று பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவின் தலைவருக்கு அறிவித்தது.

சம்பள அதிகரிப்புக் கோரி இப்போராட்டம் ஆரம்பிக்கப் பட்டது தெரிந்ததே. (இ)

பதவியாவில் பொலீஸ்காரர் பலி!

யாழ்ப்பாணம்,பெப் 3

திருகோணமலைமாவட்டத்தில் உள்ள பதவியாப் பகுதியில் இடம் பெற்ற நிலக் கண்ணி வெடித் தாக்குதலில் பொலீஸ் ஒருவர் கொல்லப் பட்டார்.

மற்றும் ஒருவர் காயமடைந்தார்.

இச்சம்பவம் நேற்று நடைபெற்றது. (இ-10)

டிக்ஸிற் டில்லி அழைக்கப்பட்டார்

புதுடில்லி, பெப்'3

இனப்பிரச்சினை தொடர்பான பேச்சுவார்த்தையை மீண்டும் ஆரம்பிக்கும் சாத்தியக்கூறுகள் பற்றி ஆராய்வதற்காக இலங்கைக்கான இந்திய தூதுவர் டிக்ஸிற் நேற்று புதுடில்லி அழைக்கப்பட்டார்.

கொக்கட்டிச்சோலையில் சுமார் 200 பொதுமக்கள் வரை கொலை செய்யப்பட்டிருப்பதாக வெளிவந்த செய்தி தொடர்பாகவும் டிக்ஸிற்றிடம் கேட்கப் பட்டதாகவும் புதுடில்லிச்செய்திகள் தெரிவிக்கின்றன. (இ)

புதுடில்லியில் நேற்று

நட்வர் சிங்கை திலகரத்தின சந்தித்தார்

புதுடில்லி, பெப் 3

இணை அமைச்சர் நட்வர்சிங்கை இலங்கைத் தூதர் பேர்னுட் திலகரத்தின நேற்று புதுடில்லியில் சந்தித்துப் பேச்சுக்கள் நடத்தினர், இணை அமைச்சர் சிதம்பரம் மற்றும் சிரேஷ்ட அரச அதிகாரிகளும் பேச்சுக்களில் கலந்துகொண்டனர்.

இலங்கை நிலைமை குறித்து இப்பேச்சுக்களின்போது ஆராயப் பட்டது. (இ-எ)

சென்னையில் இந்திய — பாக் மோதல்

சென்னை, பெப் 3

இந்திய, பாகிஸ்தான் அணிகளுக்கு இடையேயான முதலாவது கிரிக்கெட் டெஸ்ட் போட்டி இன்று (செவ்வாய்) சென்னையில் ஆரம்பமாகும்.

இந்திய அணிக்கு கபில்தேவ் கப்டன் ஆவர். (இ-எ)

ஹெலி நோட்டமிட்டது

யாழ்ப்பாணம்,பெப் 3

நேற்று மாலை ஹெலிக்கொப்டர் ஒன்று ஆனைக்கோட்டை, மானிப்பாய் பகுதிகளை மிகத்தாழ்வாகப் பறந்த வண்ணம் நோட்டமிட்டது.

நேற்று முன்தினம் திறந்து வைக்கப்பட்ட ''தியாக சிலம்'' சிறுவர் பூங்காப் பகுதியையே குறிப்பாக இந்த'ஹெலி' நோட்டம் இட்டதாகத் தெரிகிறது. (இ-10)

● சுதந்திர தினத்தில் கறுப்புக்கொடி

நாளை சுதந்திர தினத்தில் சகல வர்த்தகர்களும் கறுப்புக்கொடிகளைப் பறக்கவிட்டு துக்கம் அனுஷ்டிக்கவேண்டும்.

யாழ் வர்த்தகர் சங்கம் மேற்கண்டவாறு வேண்டுகோள் விடுத்துள்ளது.

இதேவேளை அன்னையர் முன்னணி நாளைகுடா நாட்டின் பல இடங்களிலும் கூட்டங்களையும் ஊர்வலங்களையும் நடத்த உள்ளது (இ-10)

கொல்லப்பட்டனர்

தெஹ்ரான்,பெப்.3

நேற்று ஈராக் நடத்திய வானத்தாக்குதலில் சுமார் 70 பாடசாலை மாணவிகள் கொல்லப் பட்டனர்.

இப்படி ஈரான் அரசாங்கம் நேற்று அறிவித்தது. (இ-எ)

அண்ணா நினைவு தினத்தைமுன்னிட்டு

கருணாநிதியும் மற்றும் 662 தொண்டர்களும் விடுதலை

எம். ஜி. ஆர். ஏற்பாடு

மு. கருணாநிதி

எம். ஜி. ஆர்.

சென்னை. பெப்.3

சிறைத்தண்டனை விதிக்கப்பட்ட திராவிட முன்னேற்றக் கழகத் தலைவர் கலைஞர் மு. கருணாநிதியும் 662தொண்டர்களும் நேற்று விடுதலை செய்யப்பட்டனர்.

பேரறிஞர் அண்ணாவின் நினைவு தினம் இன்று. இதை ஒட்டி தி.மு.க. தலைவரும் தொண்டர்களும் நேற்றே விடுதலை செய்யப்பட்டனர்.

இதற்கான உத்தரவை தமிழ்நாடு முதல் அமைச்சர் திரு. எம். ஜி. இராமச்சந்திரன் பிறப்பித்தார்.

இந்தி எதிர்ப்புப் போராட்டத்தில் இந்திய அரசியல் சட்டத்தின் 17ஆம் பிரிவை எரித்ததற்காக தி. மு. க. தலைவர் கருணாநிதிக்கும் தொண்டர்களுக்கும் சிறைத்தண்டனை விதிக்கப்பட்டது.

கடந்த வெள்ளிக்கிழமை திரு. மு கருணாநிதிக்கு 10வாரகாலகடுங்காவல் சிறைத்தண்டனை விதிக்கப்பட்டது.

குண்டு வெடிப்புச் சம்பவங்களில் கைது செய்யப்பட்டு சிறையில் இருப்பவர்களைத் தவிர ஏனையோர் விடுவிக்கப்பட்டு விட்டனர் என்று தமிழ் நாடு உள்துறைச் செயலாளர் திரு டி.வெங்கட்ராமன் தெரிவித்தார். (இ-எ)

முந்திரிக்குளம் பகுதியில்கண்ணிவெடி

சிப்பாய்கள் சிலர் பலி! புலிகள் கடும் சமர்!!

யாழ்ப்பாணம், பெப். 3

முல்லைத்தீவு இராணுவ முகாமில் இருந்து நேற்று ரோந்து சென்ற சிப்பாய்கள் மீது முந்திரிக்குளம் பகுதியில் வைத்து விடுதலைப்புலிகள் கண்ணி வெடித் தாக்குதல் நடத்தினர்.

டிராக்டரில் வந்த சிப்பாய்களில் சிலர் அந்த இடத்திலேயே கொல்லப்பட்டனர் என்று தெரிவிக்கப்படுகிறது.

இதனை அடுத்து விடுதலைப் புலிகளுக்கும் சிப்பாய்களுக்கும் இடையில் பலத்த நேரடிச் சமர் (4ஆம் பக்கம் பார்க்க)

வெளிநாட்டு முகவரின் வீட்டுத் தளபாடங்கள் இளைஞரால் அபகரிப்பு

தமிழீழ நீதிமன்றில் ஒப்படைப்பு

யாழ்ப்பாணம். பெப் 3

வெளிநாட்டு முகவர் என்று கூறிவந்த ஒருவரின் வீட்டில் இருந்த சகல தளபாடங்களும் கதவுகளும், ஜன்னல்களும், கூரைகளும் அகற்றப்பட்டு தமிழீழ கிராம நீதி மன்றில் ஒப்படைக்கப்பட்டன.

நேற்று பொம்மை வெளியில் உள்ள ஒருவரது வீடே இவ்வாறு சில இளைஞர்களினால் முற்றுகையிடப்பட்டு பொருட்கள் அகற்றப் பட்டன.

வெளிநாட்டுக்கு அனுப்பி வைப்பதாக கூறி நூற்றுக்கும் அதிகமான இளைஞர்களிடம் (4ஆம் பக்கம் பார்க்க)

அரசு உத்தியோக பூர்வமாக

அழைத்தால் மட்டுமே பிரபா இந்தியா திரும்புவாராம்

பெங்களூர், பெப் 2

இந்திய அரசு உத்தியோகபூர்வமாக அழைத்தால் ஒழிய தமிழீழ விடுதலைப் புலிகள் தலைவர் திரு வே பிரபாகரன் இந்தியா திரும்பும் திட்டம் எதுவும் இல்லை.

தமிழீழ விடுதலைப் புலிகள் ஆலோசகர் டாக்டர் அன்ரன் பாலசிங்கம் முன்கண்டவாறு தெரிவித்ததாக பெங்களூரில் இருந்து வெளியாகும் 'டெக் கான் ஹெரால்ட்' பத்திரிகை செய்திவெளியிட்டுள்ளது.

இந்திய மத்தியஸ்த முயற்சிகளில்போதுமான அளவு முன்னேற்றம் காணவில்லை. இதனைத் தொடர்ந்து யாழ்ப்பாணத்தில் நிலைமைப் பலப்படுத்தவே திரு. பிரபாகரன் அங்கு சென்றார்.

யாழ் மக்கள் தாங்கள் தனித்து விடப்பட்டு விட்டோம் என்று உணருகின்றார்கள்.

புதுடில்லி, சென்னை, கொழும்பு, என்று அடிக் (4ஆம் பக்கம் பார்க்க)

கிட்டு கூறுகிறார்;

எந்தச் சவாலையும் சந்திக்க மக்கள் தயாராக இருக்கவேண்டும்

காங்கேசன்துறை பெப் 3

எந்தச் சவாலையும் சந்திக்க மக்கள் தயாராக இருக்க வேண்டும்.

தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்க வட பிராந்தியத் தளபதி திரு. கிட்டு முன் கண்டவாறு தெரிவித்தார்

தெல்லிப்பழை ஆரம்ப சுகாதார நிலையம் ஞாயிறன்று நடத்திய கொடிதின வைபவத்தில் கலந்து கொண்டு பேசுகையில் திரு. கிட்டு இப்படிச் சொன்னார்.

தெல்லிப்பழை கூட்டுறவுச் சங்கத் தலைவர் திரு. எஸ். சிவமகாராசா தலைமை வகித்தார், திரு. கிட்டு மங்கல விளக்கேற்றினார்.

கடந்த ஒரு வருடமாக யாழ் குடா நாட்டில் அமைதி நிலவி வருகின்றது எந்த நேரம் என்ன நடைபெறும் என்று (4ஆம் பக்கம் பார்க்க)

தென்னிலங்கை

பஸ் குண்டு வெடிப்புகளுக்கு வடக்கு மீதான பொருளாதார தடையே காரணம் - ந- ச- ச- க-

கொழும்பு, பெப். 3

வடபகுதி மீது விதிக்கப்பட்டுள்ள பொருளாதாரத்தடைதான் தென் இலங்கையில் பஸ்குண்டு வெடிப்புப் போன்ற சம்பவங்கள் மீண்டும் தொடங்கக் காரணம்.

இப்படி நவசமசமாஜக் கட்சிப் பொதுச் செயலாளர் டாக்டர் விக்ரமபாகு கருணாரத்ன விடுத்த அறிக்கை ஒன்றில் தெரிவித்திருக்கிறார்.

அந்த அறிக்கை வருமாறு;

யாழ்ப்பாணத் தமிழ் மக்கள் மீது விதிக்கப்பட்டுள்ள பொருளாதாரத் தடை காரணமாகத் தென் இலங்கை குடிமக்கள் மீது தாக்குதல் மீண்டும் ஆரம்பித்துள்ளது.

தேசிய பாதுகாப்பு அமைச்சரின் குறுகிய எண்ணம் கொண்ட கொள்கை காரணமாக இந்த நிலை தோன்றியுள்ளது என்று நாம் ஒரு வாரத்துக்கு முன் கூறியிருந்தோம்.

கைப்பற்றும் முயற்சி

தீர்வுக்கான வழி வகைகளை ஏற்படுத்துவதாகக் கூறிக் கொண்டு யாழ் மக்களை மெதுவாகக் கொன்று குடாநாட்டை மீண்டும் கைப்பற்றும் (4-ம் பக்கம் பார்க்க)

சுபநேரம்
03—02—1987
செவ்வாய்க்கிழமை
சுபநேரம்:
11.05 முதல் 12 .35வரை
ராகுகாலம்:
3.35 முதல் 5 .05 வரை
இவை பகலுக்கும் இரவுக்கும் பொருந்தும்

முச்சக்கரவண்டிகள் மூலம் குப்பைகள் அகற்றப்படும்

யாழ் மாநகர ஆணையாளர் திட்டம்

யாழ்ப்பாணம்,பெப். 3

முச்சக்கர வண்டிகள் மூலம் குப்பை அகற்றும் திட்டம் ஒன்றை யாழ் மாநகர சபை கொண்டு வர உள்ளது.

எரிபொருள் பிரச்சினை காரணமாகஏற்பட்டுள்ள வாகன நெருக்கடியைத் தவிர்க்கவே இப்புதிய திட்டம் நடைமுறைப் படுத்தப்பட உள்ளது.

இப்படி யாழ் மாநகர ஆணையாளர் திரு. [illegible] கே. சிவஞானம் தெரிவித்தார்.

யாழ்ப்பாணம் குருநகர் சென் ஜேம்ஸ் சன சமூக நிலையம் கடந்த ஞாயிறு [illegible] நடத்தியது.

அதைத் தொடக்கி வைத்துப் பேசுகையிலேயே ஆணையாளர் திரு. சிவஞானம் முன்கண்டவாறு சொன்னார்.

நிலையத் தலைவர் திரு. அ. வேதநாயகம் தலைமையில் 150 தொண்டர்கள் சிரமதானத்தில் ஈடு (4ஆம் பக்கம் பார்க்க)

தொண்டமானாற்றில் நேற்று மோதல்

யாழ்ப்பாணம்,பெப்.3

தொண்டமானாறு இராணுவ முகாமில் இருந்து வெளியேறிய சிப்பாய்களை நோக்கி விடுதலைப்புலிகள் நேற்றுகடும் தாக்குதல்நடத்தினர்.

கடல் பகுதியிலிருந்தும் பீரங்கித்தாக்குதல்கள் மேற்கொள்ளப் பட்டன.

விடுதலைப்புலிகளின் எதிர்த்தாக்குதல் காரணமாக சந்நிதி கோயில்வரை முன்னேறி வந்த சிப்பாய்கள் முகாமுக்குத்திரும்பிச் சென்றனர்.(இ-10)

சின்னஞ் சிறு விளம்பரங்கள்

ஏல விற்பனை

ஊர்காவற்றுறை ஆஸ்பத்திரி வீதி, 'ரூஜ் வேலஸ்' திரு. ஆ. சக்திவடிவேல் அவர்களிடம் 1-8-1984 தொடக்கம் 31 - 8 - 1985 வரை அடைவுவைத்து மீட்கப்படாத நகைகள் 28-2-1987 காலை ஒன்பது மணி தொடக்கம் அதே அடைவு கடையில் வைத்து விற்கப்படும் கே இராஜகோபால், ஏல விற்பனவாளர், வண்ணார் பண்ணை.

சேவை

மணமகன், மணமகள் தேவையானோர் எஞ்சினியர், டாக்டர், எக்கவுண்டன், ஆசிரியர் வேறு பல தொழில்களை வகிக்கும் 45 வயதுக்கு உட்பட்டவர்களுக்கும் தாரம் இழந்தவர்களுக்கும் உடனுக்குடன் பொருத்தம் பார்த்துத் தரப்படும் கல்யாணி திருமண நிலையம், சிவகுரு மனோகரன் (தரகுதாரர்), சிவன் கோவிலடி, சாவகச்சேரி

செம்பியன்பற்று, குடாரப்பு, அம்பன், குடத்தனை:

மீண்டும் பம்பாய் வெங்காய செய்கை ஆரம்பம்

பருத்தித்துறை, பெப் 3 செம்பியன்பற்று, குடாரப்பு, அம்பன், குடத்தனைப் பகுதிகளில் பம்பாய் வெங்காயச் செய்கை மீண்டும் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

இதன் முன்னோடி நடவடிக்கையாக செம்பியன்பற்று விவசாய விரிவாக்கச் சேவையாளர் பிரிவிலுள்ள 27 தொடர்புக் கமக்காரர்கள் பம்பாய் வெங்காய நாற்று மேடைகளை அமைத்துள்ளனர்.

இவர்கள் அரசினால் சிபாரிசு செய்யப்பட்ட புனா சிவப்பு நிற வெங்காய விதைகளையே பயன்படுத்தியுள்ளார்கள்.

மேலும் அம்பன் விவசாயப் போதனாசிரியர் பிரிவிலுள்ள விவசாயிகள் பம்பாய் வெங்காயச் செய்கையில் ஈடுபட விரும்பினால் அரசினால் சிபாரிசு செய்யப்பட்ட நல்லின விதைகளைப் பெற்றுத் தருவதற்கு அம்பன் விவசாயப் போதனாசிரியர் திரு. வ பரமேஸ்வரன் தயாராகவுள்ளார்

பம்பாய் வெங்காய நாற்றுக்கள் தேவையானவர்கள் செம்பியன்பற்று விவசாயப் விரிவாக்கச் சேவையாளர் திரு. செ ரூபசிங்கா வுடன் தொடர்பு கொள்ளுமாறு வேண்டப்படுகின்றனர்.

தற்பொழுது செய்கை பண்ணப்படும் வெங்காயத்தில் குமிழ் அழுகல் நோய் காணப்படுகின்றதெனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

இதனை உடனடியாகக் கட்டுப்படுத்த ஒரு அவுன்ஸ் வண்டசெப் பங்கஸ்நாசினிக்கு 2 கலன் நீர் கலந்து விசிறவேண்டும் அல்லது கப்ரான் 1 அவுன்ஸ் பங்கஸ் நாசினிக்கு 2 கலன் நீர் கலந்து விசிற வேண்டும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

யாழ் மாவட்டத்தில் குறிப்பாக வரண்ட வலயத்தில் பெப்ரவரி மாதத்திற்கும் ஏப்ரல் மாதத்திற்கும் இடைப்பட்ட சிறு போகத்தில் நீர்ப்பாசன செய்கையின் கீழ் பம்பாய் வெங்காயப் பயிர்ச்செய்கையிலிருந்து சிறந்த வருமானத்தைப் பெறமுடியும் எனவும் ஏப்ரல்மாத இறுதிப் பகுதி இச்செய்கைக்கு மிகவும் உகந்த காலமாகும் எனவும் அறிவுறுத்தப்பட்டுள்ளது. (இ-118)

பாராட்டு விழா

நீர்வேலி, பெப். 3 யாழ் மாவட்ட ஐக்கிய நாணய சங்கத்தின் உபதலைவியாகவும், மாதர் குழுவின் தலைவியாகவும் கூட்டுறவுத் துறையில் சேவையாற்றி வந்த திருமதி வேதவல்லி கந்தையா அவர்களின் சேவையைப் பாராட்டி எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை நீர்வேலியில் உள்ள வடகிழக்கு தெற்கு பகுதி ப நோ. கூ. சங்க மண்டபத்தில் பாராட்டு விழா ஒன்று நடைபெற உள்ளது. (உ-110)

கொக்கட்டிச்சோலையில்

பாதிப்புற்றோருக்கு ரூபா 1லட்சம் உதவி

புனர்வாழ்வுக் கழகம் வழங்குகிறது

யாழ்ப்பாணம், பெப் 3 மட்டக்களப்பு கொக்கட்டிச்சோலைப் பகுதியில் கடந்தவாரம் அரசபடைகள் நடத்திய பெரும் அட்டூழியத்தில் பாதிப்புற்ற மக்களுக்கு உதவுவதற்காக 'தமிழ் அகதிகள் புனர்வாழ்வுக் கழகம்' ஒருலட்சம் ரூபாவை வழங்கியுள்ளது.

இப்பகுதியில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உடனடியாக நிவாரணம் வழங்க இந்தப் பணம் உபயோகிக்கப்படும் என புனர்வாழ்வுக் கழகத்தின் பேச்சாளர் ஒருவர் தெரிவித்தார் (உ)

அமாவாசைத் திருவிழா

நீர்வேலி, பெப் 3 அகில இலங்கை விஸ்வகர்ம சங்கத்தினரால் வருடாவருடம் திருக்கேதீஸ்வரத்தில் நடத்தி வரும் தை அமாவாசைத் தீர்த்தத் திருவிழாவும், அன்னதானமும் இவ்வருடமும் கடந்த வியாழனன்று சிறப்பாக நடத்தப்பட்டது. (உ-110)

பலாலிப் பகுதியில் மின்வயர் திருட்டு

பலாலி பெப் 3 வயாவிளான், தோலகட்டிப் பகுதிகளின் பிரதான மின் வழங்கும் வயர்களில் இருந்து வீடுகளுக்கு மின் வழங்குவதற்காக இணைக்கப்பட்ட வயர்கள் இரவோடிரவாகத் திருடப்படுகின்றன.

வயாவிளான்- பலாலி குரும்பசிட்டி இராணுவ விஸ்தரிப்பின் காரணமாக அவ்விடங்களில் இருந்து வெளியேறியோரின் வீடுகளில் இருந்த ஏற்கனவே பல பொருள்கள் திருடப்பட்டுள்ளன

மின் மோட்டர், தளபாடங்கள், கதவு, யன்னல், அவற்றின் நிலைகள், கூரைஓடுகள், சுரை மரங்கள் கூட அகற்றப்பட்டுள்ளன

வடபகுதிக்கான எரிபொருள் தடைசெய்யப்பட்டிருப்பதால் தோட்டங்கள் வீடுகளுக்கு சட்ட விரோத மின் இணைப்பைப் பெறும் முயற்சிகள் அதிகரித்துள்ளன.

இதற்குப் பயன்படுத்தவே வீடுகளுக்கு இணைக்கப்பட்ட மின வயர்கள் திருட்டுத்தனமாக அகற்றப்படுகின்றன எனத் தெரிய வருகின்றது.

வயாவிளான் பகுதியில் தற்போது மின்சார விநியோகம் தடைப்பட்டுள்ளமை மின் வயர்த் திருடர்களுக்கு சாதகமாக அமைந்துள்ளது (உ-119)

முத்திரைத் தட்டுப்பாடு

யாழ்ப்பாணம், பெப் 3 யாழ் குடாநாட்டிலுள்ள உப தபால் கந்தோர்களில் மீண்டும் முத்திரைகளுக்கு தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது.

பல உப தபால் நிலையங்களில் 'முத்திரை இல்லை' என எழுதிய அட்டைகள் தொங்கவிடப்பட்டிருக்கின்றன.

கடந்த மாதம் முதல் அரசின் தபால் முத்திரைகள் மீண்டும் குடாநாட்டில் புழக்கத்திற்கு வந்துள்ளமை முத்திரை தட்டுப்பாட்டிற்கான ஒரு காரணம் என தபால் திணைக்கள ஊழியர் ஒருவர் தெரிவித்தார். (உ-5)

சுன்னாகத்தில் திருட்டு

சுன்னாகம், பெப். 3 நீண்டநாள் இடைவெளியின் பின் சுன்னாகத்தில் பல்லாயிரக் கணக்கான ரூபா பெறுமதியான நகைகள் களவாடப்பட்டன.

சுன்னாகம் அந்தோனியார் வீதியில் நடைபெற்ற இக்களவு குறித்து தமிழீழ விடுதலைப் புலிகளின் சுன்னாகம் பிரதேச அலுவலகத்தில் புகார் செய்யப்பட்டுள்ளது

வீட்டில் இருந்தோர் நித்திரையில் இருந்த சமயம் வீட்டு ஜன்னல் கம்பிகளை உடைத்து உட்புகுந்தது கள்வர் கோஷ்டி

5 பவுண் நிறையுடைய இரண்டு சங்கிலிகளையும், இரண்டரைப் பவுண் நிறையுடைய ஒரு சோடிக் காப்பையும், பணமாக ரூபா ஆறுபிரத்தையும், மற்றும் விலையுயர்ந்த உடுபுடைவைகளையும் இக்கோஷ்டி களவாடிச் சென்றது.

நள்ளிரவு 12 மணிக்கும் இரண்டு மணிக்கும் இடையில் களவு நடைபெற்றது. (இ-27)

இந்து சமயத்தை வளர்க்க முன் வாருங்கள்

இந்துமத வளர்ச்சிக்கழகதலைவர்உரை

மண்டைதீவு, பெப் 3 இந்து மதம் மிகவும் பழைமையானது நமது முன்னோர்கள் வளர்த்தெடுத்த இந்து மதத்தைப் பாதுகாத்து வளர்த்தெடுப்பதற்கு இந்துக்கள் ஒவ்வொருவரும் முன்வர வேண்டும்

மண்டைதீவு இந்து மத வளர்ச்சிக் கழகத் தலைவர் திரு. ந. விஜயசுந்தரம் இவ்வாறு குறிப்பிட்டார்.

கழகத்தின் விசேட கூட்டம் ஒன்றிற்குத் தலைமை வகித்துப் பேசுகையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்,

அவர் அங்கு தொடர்ந்து பேசுகையில்—

நம்மில் பலர் துன்பம் வரும்போதுதான் இறைவனை நினைக்கின்றார்கள். அதைவிடுத்து தினமும் இறை சிந்தனை எமக்கு வேண்டும் இறை சிந்தனையிருக்குமானால் உள்ளம் தூய்மையடையும்.

இதனால் எம்மைப் பிடித்த தீய பழக்கங்கள் எம்மைவிட்டு காணுகவே மறைந்து விடும் மனிதன் தெய்வமாக மாறி விடுவான். அதனால் பிரச்சினைகளுக்கே இடமே இருக்காது என்றார் (உ-88)

புதிய மன்று

பலாலி, பெப் 3 வயாவிளான் ஒட்டகப்புலப்பகுதியிலும் புதிய கிராமிய நீதிமன்றம் ஒன்று இயங்கத் தொடங்கியுள்ளது. (உ-119)

விடுதலைப் போரை உலக நாடுகள் அங்கீகரிக்கும் நிலை வந்து விட்டது

புலிகளின் மாவட்டத் தளபதி கிட்டு உரை

மானிப்பாய், பெப் 3 ஈழ விடுதலைப் போராட்டத்தை உலகநாடுகள் அங்கீகரித்து எமக்கு உதவி செய்யும் நிலை நெருங்கிவிட்டது.

தமிழ் ஈழ விடுதலைப் புலிகள் இயக்கத்தின் யாழ் மாவட்டத்தளபதி கிட்டு ஆனைக்கோட்டையில் நடைபெற்ற விழா ஒன்றில் இவ்வாறு கூறினார்.

ஆனைக்கோட்டை சாவற்காடு என்ற இடத்தில் ஆரம்ப சுகாதார கவனிப்பு நிலையக் கட்டட திறப்புவிழா ஒன்றில் திரு. கிட்டு அதிதியாக கலந்து கொண்டார்.

திரு. நா. பொன்னம்பலம் தலைமையில் நடந்த நிகழ்ச்சியில் மேற்படி கட்டடத்தை அவர் திறந்துவைத்து உரையாற்றினார்.

[illegible]

தமிழ் இனம் இன்று [illegible] வாழ்கின்றது. [illegible] கள் பட்டினியால் இறக்கவும் நேரிடலாம்.

இழந்த நம் உரிமைகளை வென்றெடுப்பதற்கு மக்கள் எமக்கு ஆதரவும் உற்சாகமும் அளித்து வருகின்றனர் எமது போராட்டத்துக்கு மக்களின் ஆதரவு வலு அதிகரித்துக்கொண்டிருக்கும் வரை எமது நோக்கில் நாம் இம்மியும் தளராது உறுதியுடன் போராடுவோம்.

உலகநாடுகளின் கண்ணோட்டங்கள். கண்டனங்கள் ஆகியவற்றையெல்லாம் அலட்சியப்படுத்தும் வகையில் தமிழ் மக்கள்மீது மிகக்கொடூரமான தாக்குதல்களை நடத்தி வருகின்றது அரசாங்கம்.

அரசாங்கத்தின் அராஜக தாக்குதல்களை எதிர்த்து உரிமைகளுக்காக நாம் போராடுகின்றோம். [illegible] நாம் போராட்டம் நடத்துகின்றோம் என்பதை உலகநாடுகள் எல்லாம் [illegible] எமது போராட்டங்களை அவை அங்கீகரிக்கும் நிலைக்குவந்துள்ளன.

— இப்படி அவர் கூறினார்.

தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்க மானிப்பாய் பிராந்திய அமைப்பாளர் திரு. மயூரன் அங்கு உரையாற்றுகையில்—

எமது போராட்டத்திற்கு ஆரம்ப சுகாதார நிலையங்களின் உதவிகளும் தற்காப்பு நடவடிக்கைகளும் அவசியம் தேவை என்றார்.

கடற்றொழில் கூட்டுறவுச் சங்கத் தலைவர் திரு. பி. இராசரட்ணம், பதில் சுகாதாரப்பரிசோதகர் திரு கனகசபாபதி கார்த்திகேசு, ஆசிரியை செல்வி கந்தசாமி, ஆரம்ப சுகாதாரநிலைய கவனிப்புக்குழுச் செயலாளர் செல்வி மீரா ஆகியோர் உட்பட பலரும் அங்கு உரையாற்றினர்

சம்பள கொடுப்பனவு தாமதம்

மண்டைதீவு, பெப் 3 யாழ் மாவட்டத்திலுள்ள அரசினர் வைத்தியசாலைகளில் கடமையாற்றும் தற்காலிக தொழிலாளருக்குரிய சம்பளக் காசோலைகள் தாமதமாகவே வழங்கப்பட்டு வருகின்றது

டிசம்பர் மாதத்துக்குரிய சம்பளக் காசோலை ஜனவரி மாதம் 26ஆம் திகதிக்குப் பின்பே கிடைத்ததாக மேற்படி தொழிலாளர்கள் கவலை தெரிவித்தார்கள்

வழமையாக 10ம் திகதிக்குள் வழங்கப்பட்டு வரும் இக்காசோலை தாமதித்து வழங்குவதால் தொழிலாளர்கள் கஷ்டமடைகின்றார்கள். (உ-88)

வவுனிக்குள சிவாலய புனருத்தாரண வேலை

யாழ்ப்பாணம், பெப். 3 தமிழ் மன்னர் காலத்தில் பனங்காமம் பற்றில் பிரபல்யமடைந்திருந்த வவுனிக்குள சிவாலயத்தின் புனருத்தாரண வேலைகள் பூர்த்தி அடைந்து வருகின்றன.

அப்பகுதி நீர்ப்பாசன பொறியியலாளர் திரு. கே. செல்வரத்தினத்தின் தலைமையில் கிராம மக்கள் இத்திருப்பணியில் ஈடுபட்டு இருக்கின்றனர்

இந்த ஆலய கும்பாபிஷேக ஏற்பாடுகள் சம்பந்தமான ஆலோசனைக் கூட்டம் அண்மையில் முல்லைத்தீவு கச்சேரியில் அரச அதிபர் திரு. க. பொன்னம்பலம் தலைமையில் நடைபெற்றது.

கும்பாபிஷேக வைபவத்தை சிறப்பாக நடத்துவதற்குரிய அமைப்புக்கள் இக்கூட்டத்தில் நியமிக்கப்பட்டன.

கும்பாபிஷேக மலர் ஒன்றும் வெளியிட தீர்மானிக்கப் பட்டுள்ளது.

இப்பகுதியில் நிலவி வந்த பண்டைய தமிழ் மக்களின் சமயக் கோட்பாடுகள், கலை, கலாசாரம், விவசாயம் மற்றும் சரித்திரச் சான்றுகள் பற்றிய ஆராய்ச்சிக்கட்டுரைகள் இம்மலரில் இடம்பெறும். (இ-எ)

ப. நோ. கூ. சங்கங்கள் பெருமளவு பாதிப்பு

மக்கள் வங்கிக் கிளைகள் மூடப்பட்டிருப்பதால்

அச்சுவேலி, பெப் 3 மக்கள் வங்கிக்கிளைகள் தொடர்ந்து மூடப்பட்டிருப்பதால் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் எதிர்பாராத நிதி நெருக்கடியை எதிர் நோக்கவேண்டி உள்ளன என்று தெரிவிக்கப்படுகிறது.

பல நோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் தமது நிதி தொடர்பான சகல கணக்குகளையும் மக்கள் வங்கிக் கிளைகளில் ஆரம்பித்து நடைமுறைப் படுத்தி வந்தன என்பது குறிப்பிடத்தக்கது

டிசம்பர் 18ஆம் திகதி தொடக்கம் நடைபெறும் அடகு வைத்தோர் சங்கத்தின் மறியல் போராட்டத்தினால் மக்கள் வங்கிக் கிளைகள் செயற்படாமல் மூடப்பட்டுள்ளன.

இந்தநிலையில் பல நோக்கு கூட்டுறவுச் சங்கங்கள் தாம் வைப்பிலிட்ட நிதியைப் பயன்படுத்த முடியாமலும் தமது நாளாந்த தேவைகளுக்கு காசோலைகளை பயன்படுத்த முடியாமலும் திண்டாடிக் கொண்டிருக்கின்றன

தற்பொழுது பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் இலங்கை வங்கிக் கிளைகளில் புதிய கணக்குகளை ஆரம்பித்து தமது நிதி தொடர்பான நடைமுறைகளை கையாள்கின்றன.

எனினும் இலங்கை வங்கி மேலதிக நிதிக் கொடுப்பனவுகளை பல நோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் எதிர்பார்க்கும் அளவுக்கு வழங்க தயக்கம் காட்டுகின்றன என்றும் மக்கள் வங்கி மூலம் தாம் பயன்படுத்தி வந்த நிதியைப் போல பயன்படுத்த முடியாமல் இருப்பதாகவும் பல நோக்கு கூட்டுறவுச்சங்க நிர்வாகிஒருவர் கூறினார் (இ-11)

தென்மராட்சியில் அகதிகள் கழகம்

தென்மராட்சி அகதிகள் புனர் வாழ்வுக் கழகம் மீண்டும் செயற்பட ஆரம்பித்துள்ளது

இதன்செயலாளர்திரு. வி எஸ். துரைராசா உதயன் செய்தியாளரிடம் இதனைத் தெரிவித்தார்

1983 ஆம் ஆண்டு சாவகச்சேரி முன்னாள் எம் பி திரு வி என் நவரத்தினம் தலைமையில் அமைக்கப்பட்ட இக் கழகம் சுமார் இரண்டாண்டு காலம் தவிர்க்க முடியாத சில காரணங்களால் செயல் பட முடியவில்லை என்று அவர் தெரிவித்தார். (இ-31)

மக்கள் முகம்

மட்டுவில் தெற்கு இளைஞர் கழகம்

மட்டுவில் தெற்கு இளைஞர் கழக வருடாந்தப் பொதுக்கூட்டம் அதன் தலைவர் திரு. த சந்திரதாஸ் தலைமையில் நடைபெற்றது.

நடப்பு வருட உத்தியோகத்தர்களாகப் பின் வருவோர் தெரிவாகினர்.

தலைவர்:- திரு த.சந்திரதாஸ் உபதலைவர்:பொ சந்திராதேவி செயலாளர்:- திரு ச. சர்வேஸ்வரி உப செயலாளர்:- திரு பா. சிவபாலன் பொருளாளர்:- திரு வே. விமலாம்பிகை.

மேலும் சமூகசேவை அபிவிருத்திப்பணிக்கு ச இராசேஸ்வரியும். விளையாட்டு பொழுதுபோக்கு குழுவிற்கு வி ஞானசேகரமும், கல்விப் பயிற்சிக்கு ம. தவேந்திரலிங்கமும், செய்தி தொடர்பு பிரசாரத்திற்கு ப உதயலதாவும், கலாசார சமயத் துறைக்கு பொ. புஷ்பலதாவும், ஆராய்ச்சி சமய வளர்ச்சிக்குழுவிற்கு சி ப்ரபனும் பொறுப்பாளர்களாகத் தெரிவு செய்யப்பட்டனர்.

கழகத்தின் ஆலோசகர்களாக டாக்டர் இ சிவஞானசுந்தரம், திருமதி பாலசிங்கம் புவனேஸ்வரி, செல்வி ச. மதுரேஸ்வரி ஆகியோர் தெரிவாகினர். (இ-31)

விளையாட்டரங்கு

ஷப்ரு ஆதரவு உதைபந்தாட்டம்:

கிறீன்பீல்ட் மீண்டும் வென்றது!

யாழ்ப்பாணம் பெப்.3 ஷப்ரு ஆதரவில் நடைபெற்று வரும் 7 பேர் கொண்ட அணிகளுக்கிடையிலான உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டியின் மற்றொரு ஆட்டத்தில் கிறீன் பீல்ட் விளையாட்டுக்கழக அணி மீண்டும் வெற்றி பெற்றது

சென் அன்ரனீஸ் விளையாட்டுக் கழக அணிக்கு எதிரான ஆட்டத்திலேயே கிறீன் பீல்ட் அணி வெற்றிபெற்றது.

ஏற்கனவே சென் மேரிஸ் விளையாட்டுக் கழக அணிக்கு எதிரான ஆட்டத்தில் கிறீன்பீல்ட் அணி வெற்றி பெற்றிருந்தது

அரியாலை ஐக்கிய விளையாட்டுக்கழகத்துக்கு எதிரான ஆட்டம் வெற்றி தோல்வியின்றி முடிவுற்றது.

கடந்த ஞாயிற்றுக் கிழமை சென் அன்ரனீஸ் அணிக்கு எதிராக நடைபெற்ற ஆட்டத்தில் கிறீன் பீல்ட் அணி 1-0 என்ற கோல்கணக்கில் வெற்றியீட்டியது.

இரு அணிகளும் சளைக்காமல் சிறப்பாக விளையாடியதால் ஆட்டம் விறுவிறுப்பாக அமைந்தது

வெற்றிக்கான கோலை சின்னராசா பெற்றுக் கொடுத்தார்.

சென். அன்ரனீஸ் அணியின் சார்பில் மமானீஸ், டன்ஸன், கனியூட் ஆகியோர் சிறப்பாக விளையாடினர்.

இந்த ஆட்டத்துக்கு சண. கிட்லர் மத்தியஸ்தம் வகித்தார்

அரியாலை ஐக்கிய விளையாட்டுக்கழக அணிக்கும் சென் மேரிஸ் விளையாட்டுக் கழக அணிக்கும் இடையிலான மற்றொரு ஆட்டம் வெற்றி தோல்வியின்றி முடிவுற்றது

இரு அணிகளும் தலா 2 கோல்களை அடித்தனர்.

சென் மேரிஸ் தரப்பில் எதிர் வீரசிங்கம், பஞ்சன் ஆகியோரும் —

அரியாலை அணியின் சார்பில் என் சிவபாலன், பி. பிரேம்குமார் ஆகியோரும் கோல்களை அடித்தனர்.

ஆட்டம் தொடங்கி முடியும் வரை இரு அணிகளும் சளைக்காமல் போராடின.

இந்த ஆட்டத்துக்கு திரு எம். ரி. இராஜேந்திரம் மத்தியஸ்தம் வகித்தார்.

அரியாலை ஐக்கிய விளையாட்டுக்கழக மைதானத்தில் அக்கழகத்தின் ஆதரவுடனும் யாழ் உதைபந்தாட்ட லீக்கின் அனுசரணையுடனும் இந்தச் சுற்றுப்போட்டி நடைபெற்று வருகிறது (உ)

ஊரெழு றேயல் சாம்பியன்

சுன்னாகம். பெப். 3 சுன்னாகம் சிங்கமாப்பாணர் விளையாட்டுக் குழுவினர் நடத்திய உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியில் ஊரெழு றேயல் விளையாட்டுக்கழகம் சாம்பியனாகத் தெரிவானது.

இறுதிப் போட்டியில் காங்கேசன்துறை யங் றேயல் விளையாட்டுக் கழகமும் ஊரெழு றேயல் விளையாட்டுக் கழகமும் மோதின.

விறுவிறுப்பாக நடைபெற்ற இப்போட்டியைப் பார்ப்பதற்கு சுன்னாகம் சிங்கமாப்பாணர் அரங்கில் பெரும் எண்ணிக்கையானோர் கூடியிருந்தனர்.

போட்டி ஆரம்பமாகி 10 ஆவது நிமிடத்தில் ஊரெழு றேயல் கழக முன்னணி வீரர் தர்மகுலநாதன் முதலாவது கோலைப் போட்டார் மீண்டும் அவர் தமக்கு கிடைத்த சந்தர்ப்பத்தை பயன்படுத்தி இரண்டாவது கோலையும் போட்டார்

ஊரெழு றேயல் முன்னணி வீரர் சின்னராசா அடுத்தடுத்து இரண்டு கோல்களைப் போட்டார்

இடைவேளை வரை 4-0 கோல்கள் என்ற நிலையில் ஊரெழு றேயல் முன்னணியில் நின்றது.

இடைவேளையின் பின் யங் றேயலுக்குகிடைத்த பனல்டியை றேயல் கோல் பாதுகாப்பு வீரர் ராஜ்குமார் திறமையாக தடுத்தமை ரசிகர்களின் பலத்த கரகோஷம் நிறைந்த பாராட்டுக்களை அவருக்கு அளித்தது.

போட்டி முடிவடையும் போது றேயல் மற்றுமொரு கோல் போட்டது

5 - 0 கோல்களால் ஊரெழு றேயல் சாம்பியனாகத்தெரிவு செய்யப்பட்டது

திரு இ.இராசேந்திரம் மத்தியஸ்தராக கடமை புரிந்தார்

பிரதம விருந்தினர் திரு சி குமாரவேல் பரிசில்களை வழங்கினார். (இ-27)

அறிவித்தல்

திரு. க. பரமேஸ்வரன் (பிரதேச உள்ளுராட்சி உதவி ஆணையாளர், மன்னார்) ஆகிய நான் உள்ளுராட்சி அன்னதான சபையில் எப்பதவியும் வகிக்கவில்லை என்பதையும், இச் சபையின் எவ்விதமான நிதி சேகரிப்பிற்கோ அல்லது செயற்பாடுகளுக்கோ நான் பொறுப்பாளியல்ல என்பதையும் இத்தால் சகலருக்கும் அறியத்தருகின்றேன். அத்துடன் திருக்கேதீஸ்வர மகா சிவராத்திரி மட பரிபாலன சபையின் தலைவர் என்ற முறையில் நிதி சேகரிப்புப் பட்டியலை ஏற்கனவே அனுப்பியுள்ளேன் என்பதையும் அறியத்தருகின்றேன்.

க. பரமேஸ்வரன்

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

உதய சங்கற்பம்

சொன்ன சொல்லையும் எறிந்த கல்லையும் திருப்பி அழைக்க முடியாது

- பேரறிஞர் அண்ணா

உதயன்

இல, 15, ஆஸ்பத்திரிவீதி(?) ஒழுங்கை தொலைபேசி: 24805
மின்சார நிலைய வீதி, 22073
யாழ்ப்பாணம் 03-02-1987 த.பெ.28

ஆக்கபூர்வமான பதில் !

இலங்கையின் இனப்பிரச்சினை தீருமா? எப்படித் தீரும்? எப்போது தீரும்?

இந்தக் கேள்விகளே ஈழத் தமிழர்கள் நெஞ்சில் நித்தம் எழுகின்றன.

தமிழர்கள் மட்டுமல்ல. சிங்கள மக்களும் இந்தக் கேள்விகளைக் கரிசனையுடன் கேட்கும் காலம் இது

ஏன், இலங்கை அரசாங்கத்தின் உயர் பீடத்தில் உள்ளவர்களும் தமது விருப்பமும் அதுவே என்று கூறி வருகிறார்கள்

இந்தச் சிக்கலான பிரச்சினை தீர்ந்தால், நாட்டை அபிவிருத்திப் பாதையில் இட்டுச் செல்ல வழி பிறக்கும் என்று மேடை மேடையாகக் கத்துகிறார்கள்! ஆனால் அவர்களிடம் அந்த உண்மையான நோக்கம் இருப்பதாகத் தெரியவில்லை !!

இனப்பிரச்சினை விவகாரத்தில் போர் நடத்தினால் எந்தத் தரப்பாருமே வெல்ல முடியாது என்று முதல் நாள் கூறும் தேசிய பாதுகாப்பு மந்திரி, அடுத்த நாள் கொக்கட்டிச்சோலையை முற்றுகையிட்டுப் போராளிகளின் முகாமைக் கைப்பற்றி விட்டதாகவும், நிர்மூலமாக்கி விட்டதாகவும் பெருமையுடன் அறிக்கை விடுகிறார். ஆனால் அங்கு அப்பாவித் தமிழர் இரு நூறு பேர் அரக்கத்தனமாக அரசபடைகளால் கொல்லப்பட்டது தான் நடந்த உண்மை,

ஜனாதிபதியோ, வெளிநாட்டுப் பத்திரிகைகளுக்கு அளிக்கும் பேட்டிகளில், போராளிகள் தான் குழப்பத்தை விளைவிக்கிறார்கள் என்ற கருத்துப்படத் தகவல் தெரிவிக்கிறார். போராளிகள் ஆயுதங்களைக் கீழே வைத்தால், தாம் மன்னிப்பு வழங்கத் தயார் என்றும் படைகளை முகாம்களுக்குள் முடக்கி வைக்க ஆயத்தம் என்றும் அடிக்கடி கூறுகிறார்.

அண்மையில் வெளிவந்த அவரது பேட்டியில், தமது இடத்தில் வேறு ஒருவர் இருப்பின் தமிழர்களே அழிக்கப்பட்டிருப்பார்கள் என்று பூடகமாகத் தெரிவித்திருக்கிறார்.

மொத்தத்தில் இனப்பிரச்சினையை இப்போது தீர்க்கக் கூடாது. தமது பதவிக் காலத்தை முற்று முழுதாக அனுபவிக்க இதனை இழுத்தடிக்க வேண்டும் என்ற உள்நோக்கத்துடன் அரசு செயற்பட்டு வருகிறது அதன் ஒவ்வொரு நடவடிக்கையும் அதனையே ருசுப்படுத்துகிறது

அதுமட்டுமன்றி அடிக்கடி இராணுவ நடவடிக்கைகளை நடத்தி, தமிழர்களது உரிமைப் போராட்டத்தை நசுக்கி, தான் நினைக்கும் தீர்வை அவர்கள்மீது திணிக்க வேண்டும் என்றும் அது திட்டமிட்டிருக்கிறது.

இனப்பிரச்சினைத் தீர்வு சம்பந்தமான பேச்சுவார்த்தைகளில் இந்தியத் தரப்பில் முக்கிய பங்கு வகிக்கும் இணை அமைச்சர் திரு. ப. சிதம்பரம் கடந்த ஞாயிற்றுக்கிழமை வெளியிட்ட தகவல் இலங்கை அரசின் மேற்கண்ட உள்நோக்கங்களையே தெளிவுபடுத்துகிறது.

ஜனவரி 27 இல் பேச்சுவார்த்தையை மீளத் தொடங்குவதற்கு ஆக்கபூர்வமான பதிலைப் பெற்றுத் தருவதாக இந்தியாவில் உள்ள இலங்கைத் தூதுவர் திரு பேர்னட் திலகரத்தின இரண்டு இணை அமைச்சர்களிடமும் தெரிவித்திருக்கிறார்.

ஆனால் அடுத்தநாள் கொக்கட்டிச்சோலைப் பகுதியில் பாரிய இராணுவத் தாக்குதல் நடத்தப்பட்டது. சுமார் 200 அப்பாவித் தமிழர்கள் மூன்று நாட்களில் கொல்லப்பட்டவர்.

இலங்கை அரசின் ஆக்கபூர்வமான பதில் அந்த அட்டூழியத் தாக்குதல்தான்! அதுவே உண்மையானால் இந்தியாவுக்குப் பெரும் ஏமாற்றம் என்று திரு. சிதம்பரம் கூறி இருக்கிறார்

இலங்கையின் இந்தப் போக்குக் குறித்து இந்தியா வெறுங் கவலை தெரிவித்து ஆகப்போவது எதுவும் இல்லை. இலங்கையில் போராளிகள் நடத்தும் தாக்குதல்களைச் சாட்டாக வைத்து -பழிவாங்கலாக ஒன்றுமறியாத அப்பாவிகளைக் கொன்று குவிக்கிறார்கள் என்பதை இந்தியா உலகத்துக்கு எடுத்துச் சொல்லவேண்டும்.

இனப்பிரச்சினை தீர்க்கப்படாமல் இழுபடுவதற்கு முக்கிய காரணம் இதுவே என்பதை சர்வதேச மக்களுக்கு அறியப்படுத்த வேண்டும்.

உலகில் வேறு எந்த நாட்டிலும், போராளிகளின் தாக்குதலைச் சாட்டி படைகள் பொதுமக்களைக் கொல்வதில்லை. ஆனால் இலங்கையில் அது சாதாரணமாகி விட்டது இந்த உண்மை நிலையை உலகுக்கு எடுத்துச் சொல்லி, இலங்கையை அதனை நிறுத்துமாறு நிர்ப்பந்திக்க வேண்டும்

பேச்சுவார்த்தைகளை மீளத் தொடங்கு முன்னர் தமிழர் பிரதேசங்களில் உள்ள ஆயுதப்படை முகாம்களில் இருந்து துருப்புகளை வெளியே வராமல் முடக்கி வைத்திருக்குமாறு இலங்கை அரசை இந்தியா கடுமையாக நிர்ப்பந்திக்க வேண்டும்

மக்களைக் கொன்று கொண்டே பேச்சுவார்த்தை நடத்த முடியாது என்று வெட்டு ஒன்று துண்டு இரண்டாக இலங்கை அரசிடம் சொல்ல வேண்டும்.

இந்தியா அடிக்கடி வெறும் கவலை தெரிவிப்பதுடன் நின்றால் இனப்பிரச்சினை நிச்சயம் மேலும் இழுபடும் எப்போது தீர்வு என்ற கேள்வி நித்தியமாகி நிரந்தரமாகி விடும்!

வட அயர்லாந்து

கெரில்லாக்களை சிறை மீட்கும் லிபியத் திட்டம் முறியடிப்பு

பிரிட்டிஷ் பாதுகாப்பு படைகளின் நடவடிக்கை

லண்டன், பெப். 2

வட அயர்லாந்தில் சிறை வைக்கப்பட்டிருக்கும் அயர்லாந்து புரட்சி ராணுவ கெரில்லாத் தலைவர்கள் சிலரை விடுவிப்பதற்கு லிபியாவும் புரட்சிகர ராணுவ இயக்கமும் இணைந்து வகுத்திருந்த திட்டமொன்று பிரிட்டிஷ் பாதுகாப்புப்படைகளினால் முறியடிக்கப்பட்டுள்ளது.

ரோமிலுள்ள லிபிய மக்கள் பணியகத்தின் பிரதிநிதிகளும் ஐ ஆர். ஏ கெரில்லா இயக்கப் பிரதிநிதிகளும் கடந்த வருட நடுப்பகுதியில் பிற்பகுதியிலும் பாரிஸ், ஆம்ஸ்டர்டாம் ஆகியநகரங்களில் சந்தித்து இந்தத் திட்டங்களை வகுத்ததும் ஆதாரபூர்வமாகக் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது

காவலில் உள்ளவர்களை விடுவிக்க ஐ ஆர். ஏ இயக்கத்தினருக்குப் போதியளவு பயிற்சியும் நிதி உதவியும் லிபியா வழங்கியுள்ளது எனவும் பிரிட்டிஷ் பாதுகாப்புப் படை அறிக்கை தெரிவித்தது (ஓ)

பக்தாத் மீது ஏவுகணை தாக்கு

பக்தாத், பெப 2

ஈரான் சனியிரவு பக்தாதைத் தாக்கியது நிலத்திலிருந்து பாய்ந்து சென்று தாக்கும் ஏவுகணைமூலம் இத்தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

இவ்வருடத்தில் பக்தாத் நகரைத் தாக்கிய ஏழாவது ஏவுகணை இது வாகும்

இதன் சேத விவரங்கள் தெரிவிக்கப்படவில்லை (ஓ)

வெளி உலகில்

பிலிப்பீன்ஸை பாதுகாக்க

மார்க்கோஸின் வேண்டுகோள்

ஹொனலுலு, பெப். 2

பிலிப்பீன்ஸ் குடியரசையும் அதன் அரசியல் சாசனத்தையும் பாதுகாப்பதற்காக ஆயுதப் படையினர் ஐக்கியப்பட வேண்டும்.

இவ்வாறு பிலிப்பீன்ஸ் முன்னாள் ஜனாதிபதி மார்க்கோஸ் வேண்டுகோள் விடுத்தார்.

மார்க்கோஸை ஆதரிக்கும் ராணுவ வீரர்கள் ஜனாதிபதி அக்கினோவின் அரசாங்கத்தை கவிழ்க்க மேற்கொண்ட சதி முயற்சி தோல்வியடைந்த ஐந்து நாட்களின்பின் மார்க்கோஸ் இந்த செய்தியை வெளியிட்டுள்ளார்.

ராணுவத்தினர் மட்டுமன்றி ஏனைய ஆதரவாளர்களும் பிலிப்பீன்ஸின் தேசியக்கொடிக்கு மதிப்பளிக்கும்வகையில் நடந்து கொள்ள வேண்டுமெனவும் மார்க்கோஸ் மேலும் வலியுறுத்தியுள்ளார். (ஓ)

பரமஹம்ஸரின் பிறந்ததின விழா

ஹைதராபாத், பெப். 2

சுவாமி இராமகிருஷ்ண பரமஹம்சரின் 105 வது பிறந்ததினவிழா நேற்று ஹைதராபாத்தில் கொண்டாடப்பட்டது (ஓ)

வளைகுடாப் போர் பற்றி அரபாத்

பெய்ரூட், பெப். 2

ஈரானுக்கும் ஈராக்கிற்குமிடையே யுத்தத்தை முடிவுக்குக் கொண்டுவர திரைமறைவில் முயற்சிகள் எடுக்கப்பட்டுள்ளன

இவ்வாறு பாலஸ்தீனிய விடுதலை இயக்கத் தலைவர் யாஸிர் அரபாத் தெரிவித்தார்.

இதில் ஐரோப்பிய நாடுகள் பல தொடர்பு கொண்டுள்ளன எனத் தெரிவித்த அரபாத் இவற்றில் சில நாடுகள் இரகசியமாக ஆயுதங்களை இருநாடுகளுக்கும் அனுப்பி வைப்பதாகவும் வருத்தம் தெரிவித்தார்.

பொருளாதாரத் தடை கனடா அதிகரிப்பு

ஒட்டாவா, பெப் 2

தென் ஆபிரிக்காவிற்கு எதிராக மேலும் பொருளாதார நடவடிக்கைகளை கனடா அறிவித்துள்ளது

சர்வதேச அபிப்பிராயத்தை மீறி தென் ஆபிரிக்கா இன ஒதுக்கலைத் தீவிரப்படுத்தி வருவதைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வருவதற்கு இந்தப் பொருளாதாரத் தடை தகுந்த பலனைத் தரும் என கனடாப் பிரதமர் பிரையன் மல்ரோனி தெரிவித்தார்

மல்ரோனி கடந்த சில தினங்களாக ஆபிரிக்க நாடுகளில் சுற்றுப் பயணம் செய்து கறுப்பின மக்களுக்கான ஆதரவையும் போர் நடவடிக்கைகளையும் ஆராய்ந்து அவற்றிற்கான கனடாவின் உதவியைப் பற்றியும் கருத்து வெளியிட்டு வருகின்றார். (ஓ)

சிதம்பரத்தில் தமிழில் பூசை

சென்னை, பெப். 2

சிதம்பரம் நடராஜர் ஆலயத்தில் மகா கும்பாபிஷேகம் இம்மாதம் 11 ஆம் திகதி நடைபெறவிருக்கின்றது.

சுமார் ஆயிரம் ஆண்டுகள் இடைவெளிக்குப் பின்னர் நேற்று முதல் இந்த ஆலயத்தில் தேவார, திருவாசகப் பாடல்கள் இசைக்கப்படுகின்றன.

சைவசமய முனிவர்களால் இயற்றப்பட்ட தமிழ்ப் பக்தி இலக்கியங்களான தேவார, திருவாசக ஏடுகள் ராஜராஜ சோழன் காலத்தில் இந்த ஆலயத்தில் இருந்து கண்டெடுக்கப்பட்டது குறிப்பிடத்தக்கது

இதுவரை காலமும் சிதம்பரம் ஆலய நிர்வாகிகளான தீட்சிதர்கள் சமஸ்கிருத மொழியையே பூசைகளுக்குப் பயன்படுத்தினர். (ஓ)

வலிகான் ஆட்சேபம்

இஸ்லாமாபாத், பெப். 2

பாகிஸ்தானில் அமெரிக்காவின் நடமாட்டம் அயல்நாடுகளுக்குக் கவலையையும் அச்சத்தையும் தருவதாக அமைகின்றது.

இவ்வாறு அவாமிதேசியக்கட்சித் தலைவர் கான் அப்துல் வலிகான் ஆட்சேபம் தெரிவித்தார்.

பாகிஸ்தானில் நிறுத்தி வைக்கப்படும் அவாக் விமானங்கள் ரஷ்யாவின் பெரும்பகுதியை உளவு பார்ப்பதற்கு உதவும் எனவும் மேலும் அவர் தெரிவித்தார். (ஓ)

தூதரகம் முன் குண்டு வெடிப்பு

காபூல், பெப் 2

ஆப்கானிஸ்தானில் உள்ள இந்திய தூதரகத்தின் முன்பாக நிறுத்தி வைக்கப்பட்டிருந்த காரினுள் வைக்கப்பட்டிருந்த குண்டு வெடித்துச் சிதறியது.

இதனால் நான்கு ஆப்கானியர்கள் பலியானார்கள்

தூதரகப் பணியாளர்கள் 15 பேர் காயமடைந்தனர்.

(ஓ)

செய்திக்கொத்து

பொதுக் கூட்டம்

சாவகச்சேரி, பெப் 3

சாவகச்சேரிப் பிரதேசத்திற்கான செயின்ட். ஜோன்ஸ் அம்புலன்ஸ் சங்கத்தின் வருடாந்தப் பொதுக்கூட்டம் இம்மாதம் 14ஆம் திகதி சனிக்கிழமை டிறிபேக் கல்லூரி மண்டபத்தில் நடைபெறும்

(இ-31)

உப அலுவலகங்கள்

மண்டைதீவு, பெப் 3

யாழ் கல்விப் பணிப்பாளரின் உப அலுவலகங்கள் யாழ் மாவட்டத்தில் நான்கு இடங்களில் திறந்துவைக்கப்படஉள்ளன

மிக விரைவில் சாவகச்சேரி தொகுதியிலும் உபகல்வி அலுவலகம் ஒன்று திறக்கப்படும்

இது சம்பந்தமான ஓர் ஆலோசனைக் கூட்டம் சமீபத்தில் யாழ் கல்விப் பணிப்பாளர் ஜனாப் எம். எம்.மன்சூர் தலைமையில் நடைபெற்றது. (இ-88)

புனருத்தாரண நடவடிக்கை

அம்பாறை, பெப். 3

அம்பாறை மாவட்டத்தைச் சேர்ந்த பதினைந்தாம் கிராமம் சித்தி விநாயகர் ஆலயத்தின் புனருத்தாரண வேலைகளைத் தொடருவதற்கு விரைவில் ஆவன செய்யப்படவிருக்கின்றது

பிரதி தபால், தந்தித் தொடர்புகள் அமைச்சரும், சம்மாந்துறை எம். பியுமான ஜனாப் எம் ஏ அப்துல் மஜீத் இந்த ஆலய புனருத்தாரண வேலைகளுக்கு உதவிபெற்றுத் தருவதாக உறுதி அளித்துள்ளார்.

பிரதி அமைச்சர் ஜனாப் அப்துல் மஜீத் அண்மையில் இந்த ஆலயத்தை நேரில் பார்வையிட்டதுடன், பல தமிழ் மக்கள் வாழும் குடியேற்றக் கிராமங்களுக்கும் சென்று தமிழ் மக்களது தேவைகள், குறைகளைக் கேட்டறிந்தார்.

(உ-14)

சத்தியாக்கிரகம்

மட்டக்களப்பு,பெப்.3

வவுணதீவுக் கிராம வாசிகளின் வீடுகளுக்குள் புகுந்து உள்ள இராணுவத்தினரை வெளியேற்றும்படி கோரி மட்டக்களப்பு அரச அதிபர் அலுவலகம் முன்பாக சத்தியாக்கிரகம் நடத்தப்பட்டது

இராணுவத்தினரால் ஆக்கிரமிக்கப்பட்ட வீடுகளில் வசித்து வந்தகிராமவாசிகளே இச்சத்தியாக்கிரகத்தில் பங்கு பற்றினர். (உ-எ)

மாநகர சபையின் கரையோரப் பகுதி சுகாதார வேலைகள்

யாழ்ப்பாணம், பெப். 3

யாழ் மாநகரசபை எல்லைக்குள் உள்ள கரையோரப்பகுதி மக்களுக்கான சுற்றுடல் சுகாதார வேலைகளை யாழ் மாநகர சபை தொடர்ந்து மேற்கொண்டுள்ளது என ஆணையாளர் தெரிவித்தார்.

கரையோரப் பகுதிகளில் சுகாதார, வடிகால், மலசலகூட வசதிகள் குறைவாலும், குடியிருப்பு நெருக்கத்தாலும் தொற்றுநோய்கள் பரவும் ஆபத்து உருவாகியுள்ளது.

இதனால் யாழ் மாநகர சபை யூனிசெப்பின் உதவியுடன் குருநகர், நாவாந்துறைப் பகுதிகளில் 87 லட்சம் ரூபா செலவில் வடிகாலமைப்பு வேலைகளை மேற்கொள்ளவுள்ளது என்றும் ஆணையாளர் கூறினார். (இ-5)

தொண்டர் நிறுவனங்கள் பதிவு

வேலணை, பெப். 3

உள்ளூராட்சி அமைச்சின்கீழ் கிராமோதய சபைகளால் அங்கத்துவம் பெற விரும்பும் தொண்டர் நிறுவனங்களின் நிலைப் புனரமைக்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

தமது அமைப்பைப் பதிவுசெய்ய விரும்பும் தொண்டர் நிறுவனங்கள் உரிய படிவத்தில் தமது விண்ணப்பங்களை நிரப்பி பெப்ரவரி மாதம் முடிவதற்குள் உதவி அரசாங்க அதிபர்களுக்கு அனுப்பி வைக்கவேண்டும்

விண்ணப்பப் படிவங்களை உதவி அரசாங்க அதிபர் பணிமனையில் பெற்றுக்கொள்ளலாம். (உ-167)

நியமனப் பத்திரம்

வேலணை, பெப். 3

வேலணை பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தில் கடமையாற்றும் ஊழியர்களுக்கு நிரந்தர நியமனப் பத்திரங்கள் வழங்கப்பட்டன.

(இ 167)

இடமாற்றம்

வேலணை, பெப். 3

வேலணை வட்டாரக் கல்வி அதிகாரி திரு. பொன்-கணேசன் நெல்லியடி உப கல்விக் கந்தோருக்கு இடமாற்றம் பெற்றார்

இவரது இடத்திற்கு புங்குடுதீவு வட்டாரக் கல்வி அதிகாரி திரு ஈ கே. ஆறுமுகம் நியமிக்கப்பட்டார்.(இ-167)

மண்டைதீவில் புலிகள் சென்றி

மண்டைதீவு, பெப் 3

மண்டைதீவு கடற்கரையிலும் அதனையொட்டிய சில பகுதிகளிலும் இரவில் தமிழ் ஈழ விடுதலைப் புலிகளினால் சென்றி போடப்பட்டுள்ளது (இ-88)



பொய்யாமொழி

குறள்:

இருவேறு உலகத்து இயற்கை திருவேறு
தெள்ளிய ராதலும் வேறு.

பொருள்

உலகத்தின் இயற்கை, ஊழின் காரணமாக இருவேறு வகைப்படும்; செல்வம் உடையவராதலும் வேறு அறிவு உடையவராதலும் வேறு

'றிஸ்க்' எடுத்துச் செயலாற்றும் துணிவு ஜனாதிபதிக்கு வரவேண்டும்

பிரியாவிடையில் தொழிற்சங்கவாதி

அம்பாறை, பெப் 3

'அரச ஊழியர்கள் நடப்பதை ஏற்றுக்கொள்ளத் தயாராகும் மனோபாவத்துடன் ('றிஸ்க்' எடுத்து) செயலாற்ற வேண்டுமெனக் கூறுவது போல் இந்த நாட்டின் தலைவருக்கும் 'றிஸ்க்' எடுத்துக் கருமமாற்றும் துணிவு வரவேண்டும்

குறிப்பாக இன்றைய இனப்பிரச்சினைக்குத் தீர்வுகாணும் விடயத்தில் அவர் 'றிஸ்க்' எடுத்து தீர்க்கமான முடிவுக்கு வரவேண் (

சுன்னாகம் தபால் அதிபரும். தொழிற்சங்கவாதியுமான திரு இ. திருநாவுக்கரசு மேற்கண்டவாறு கூறினார்.

அட்டாளைச்சேனைப் பகுதி முஸ்லிம் மக்களால் தமக்கு அளிக்கப்பட்ட பிரிவுபசார வைபவத்திற்கு நன்றி தெரிவித்து உரையாற்றுகையில் அவர் மேற்கண்டவாறு கூறினார்

அட்டாளைச்சேனை 8ஆம் குறிச்சி கிராமோதய சபையின் ஏற்பாட்டில், அல் முனீர் வித்தியாலய மண்டபத்தில் இந்த வைபவம் நடைபெற்றது

இந்தவைபவத்தில் தபாலதிபர் திரு திருநாவுக்கரசு மேலும் பேசுகையில் கூறியதாவது:-

'இனப்பிரச்சினைத் தீர்வுக்கு முட்டுக்கட்டையாக பௌத்த பிக்குகளோ அல்லது தமிழர்களோ, முஸ்லிம்களோ இருந்தால் அத்தகையவர்களைச் சுட்டுத் தள்ளிவிட்டு அல்லது சிறையிலடைத்துவிட்டு தீர்வுக்கு ஆவன செய்ய ஜனாதிபதி முன்வரவேண்டும்

இன்று நடைபெற்று வரும் அநியாயமான உயிர்ப்பலிகளுக்கும் அவலங்களுக்கும் உடன்தீர்வு கிடைக்கவேண்டும்.

இனவெறி, மதவெறி தலைவிரித்தாடும் இக்காலகட்டத்தில் முஸ்லிம் மக்களுடன் பரிசுத்தமாக நான் வாழ்ந்ததால் அவர்களை என்னால் நெருங்க முடிந்தது.

இவ்வாறு அவர் கூறினார்.

அட்டாளைச்சேனை ஜும்மா பள்ளிவாசல் நம்பிக்கையாளர் சபைத் தலைவரும், பொத்துவில் தொகுதி விவசாய அபிவிருத்தி அதிகாரசபை முகாமையாளருமான ஜனாப் எம். ஐ. அகமட்லெவ்வை பேசுகையில்-

"தபாலதிபர் திரு. திருநாவுக்கரசு தமது முன்மாதிரியான சேவை மூலம் தனித்துவ முத்திரை ஒன்றைப் பதித்துச் செல்வதுடன், மக்கள் அன்பைக் கோடிக்கணக்கில் கட்டிச் செல்கின்றார்" என்றார்.

(உ-14)

சுவிஸில் தங்க அனுமதிக்கப்பட்டுள்ள

32 தமிழரின் விண்ணப்பங்களும் மீள் பரிசீலனை செய்யப்படமாட்டா

ஜெனீவா, பெப் 2

நாடு கடத்தப்படாமல் தங்க அனுமதிக்கப்பட்டுள்ள 32 இலங்கைத் தமிழரின் அரசியல் தஞ்சம் கோரும் விண்ணப்பங்கள் மீள் பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்படமாட்டா.

சுவிஸ் நீதியமைச்சர் திருமதி எலிசபெத் கொப் முன்கண்டவாறு அறிவித்தார்.

நாடுகடத்தல் உத்தரவு பெற்ற 32 இலங்கைத் தமிழரும் தற்போதைக்கு சுவிஸில் தங்க அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

அதன் கருத்து அவர்களின் தஞ்சம் கோரும் விண்ணப்பங்கள் மீள் பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்படும் என்பது அல்ல.

இப்படி நீதியமைச்சர் மேலும் சொன்னார்.

ஆரம்பத்தில் சுவிஸ் மக்கள் இலங்கைத்தமிழ் அகதிகளுக்கு எதிராக இருந்தனர்.

ஆனால் அண்மையில் உள்ளூர்ப் பத்திரிகை ஒன்று நடத்திய கருத்துக் கணக்கெடுப்பு ஒன்றில் 45 சதவீதமானோர் இலங்கைத் தமிழ் அகதிகளை நாடு கடத்துவதை எதிர்த்து கருத்து வெளியிட்டனர்.

இக்கருத்துக் கணக்கெடுப்புக்கு முதல் சுவிஸ் டெலிவிஷன் நிலையம், இலங்கையில் தமிழருக்கு நடத்தப்படும் அநியாயங்களையும், ஏன் தமிழர் இலங்கையை விட்டு ஓடி வருகிறார்கள் என்பதையும் விளக்கும் படம் ஒன்றைத் திரையிட்டது.

இதன் காரணமாகவே சுவிஸ் மக்கள் இலங்கைத்தமிழருக்குஎதிரான போக்கைக் கைவிட்டனர்.

—இப்படி ஜெனீவாவில் இருந்து கிடைத்த செய்தி ஒன்று தெரிவித்தது. (உ-எ)

அன்னை சாரதா புலமைப் பரிசில்

பருத்தித்துறை, பெப். 3

வட இந்து மகளிர் கல்லூரியின் மற்றொருமாணவிக்கும் அன்னை சாரதா புலமைப் பரிசில் கிடைத்துள்ளது.

வட இந்து மகளிர் கல்லூரியின் ஆண்டு 7க்கான பிரவேசப் பரீட்சையில் அதிக புள்ளிகளைப் பெற்ற செல்வி சுயோகாம்பிகை என்ற மாணவி தொடர்ந்து ஆண்டு 12வரை கற்கும் வரை அன்னை சாரதா புலமைப்பரிசிலைப் பெறுவார்

சுவாமி சித்ருபானந்தா இதனைத் தெரிவித்தார். (இ-118)

நொதேண் இன்ஸ்ரிரியூட்
கண்டுக்குளி.
O/L காலைப் பிரிவு
ஆண்டு 10, 2ஆம் பிரிவு
ஆரம்பம்: 6-2-87
பாடக் குறிப்புகள் இலவசமாக வழங்கப்படும்.

உதயன்

03 - 02 - 1987 செவ்வாய்க்கிழமை

நொதேண் இன்ஸ்ரிரியூட்
கண்டுக்குளி.
A/L 87 / 88
தமிழ் - திரு . குழந்தை
செவ்வாய் 3.00 மணி
அரசியல் - திரு . ம.ஃ.றூப்
சனி, ஞாயிறு 9.00 மணி
ஆரம்பமாகிறது.

வித்தாரம்

வாரும் தம்பி முரளி! என்ன சேதி. நாட்டு நடப்பு எப்பிடி? நான் சொல்ல வேண்டியதை உன்னிடமே கேட்கிறேன் எண்டு நினையாதை.

பெற்ரோலின்ர விலை வானத்துக்கு ஏறிவிட்டுது 35 ரூபாவாக இருந்து 45 ரூபாவாகித் திடீர் எண்டு நேற்று 90 காட்டிச்சுது. காரணத்தைச் சரியாச் சொல்லுகினம் இல்லை. இராமண்ணாமார் கர்ணகடூரமாய் நிக்கினமோ அல்லது எங்களுக்குள்ளை தான் கள்ள மார்க்கட்டோ தெரியயில்லை.

டீசலுக்குள்ளை ரினரைக் கலப்படம் செய்யிறதாலை வாகனங்கள் எல்லாம் அரைவழியிலை தடங்கல்படுகுதுகள்!

அச்சாணியாரும் விட்டுப்பிடிக்கிறயில்லை எண்டு தான் நிக்கிறார். எத்தினை காலத்துக்கு எண்டு பாப்போமே!

ரெலிபோன் விஷயத்திலும் இப்போதைக்கு மாற்றம் வராது உக்ஞர் ரெலிபோனுகளையே வெட்டுகினம்.

நேற்றும் பல நம்பர்களை எடுத்து உது என்ன இடம், கடையா, கந்தோரா, வீடா, டெலிபோன் பில் ஒழுங்காய்க் கட்டினீங்களா எண்டு கேள்விக்கு மேல் கேள்வியாய் போட்டினமாம் ரெலிக்கொமியுனிக்கேஷன் இராமண்ணாமார். அதுக்குப்பிறகு பல நம்பர்கள் வேலை செய்யவில்லையாம். எப்பிடி எப்பிடி எல்லாம் திருக முடியுமோ அப்பிடி அப்பிடி எல்லாம் தமிழ் ஆக்களைத் திருகிறது தான் அச்சாணியாற்றையும், அரசாங்கத்தின்ரையும் நோக்கம்.

கதையோடை கதையாய் நேற்று இரவு ரி. வி.- அதுதான் ரூபாவாஹினி பாத்தனியே. பதவியாவிலை கண்ணிவெடியாம். ஒரு பொலிஸ் செத்ததாம் எண்டு சொல்லி அதைக் கோரச் சம்பவம் எண்டு வர்ணிச்சுது. கொக்கட்டிச் சோலையிலை குழந்தை குட்டியள் எண்டு பாராமல் மூண்டு நாளிலை இருநூறு பேரைச் சுட்டுப்பொசுக்கினது கோரச்சம்பவமாத் தெரியயில்லை லங்காபுவத்துக்கும், ரூபவாஹினிக்கும்! லங்காபுவத்திலை தமிழ் ஆக்களும் இயக்குநர்மாராய் இருக்கினம் எண்ட இரகசியம் உனக்குத் தெரியுமோ என்னவோ!

இதிலை இன்னொன்டையும் சொல்லவேணும் அரசாங்கம் தன்ரை கடைசிக் காலம் வாறதுக்கு முன்னம் தென்னிலங்கையிலை அமுலிலை இருக்கிற பல முற்போக்குச் சட்டங்களை மாற்றிக்கொண்டு வருகுது

வீட்டு உச்சவரம்புச் சட்டத்தை நீக்கிப்போட்டினம்! குதிரைப் பந்தயச் செய்தியளை வெளியிடுறதற்கு இருந்த தடையை நீக்கிப்போட்டினம். எல்லாம் முதலாளிமாரை கையுக்கை வைச்சு அடுத்த எலக்ஷனிலை வெல்லுறதுக்கு அத்திவாரம் போடுகினம். பாவம்; சிங்கள மக்களைப் பாத்துப் பரிதாபப்பட வேண்டியுள்ளது.

அரசுடைமையாக இருந்த பல துறைகள் மீண்டும் தனியார் வசமாகுது.

மொத்தத்திலை 1956க்குப் பிறகு ஒரு முழுச் சுற்றுச்சுற்றி முதலாளித்துவம் மேலை மிதக்குது இனப்பிரச்சினைப் போர்வைக்குக் கீழ இதுகளை வலு நைஸாய் அரசாங்கம் செய்து வருகுது.

இதுக்கிடையிலை அங்காலை ஒரு புதுக்கட்சியும் தொடங்கி இருக்குது டட்லி சேனநாயக்காவின் பெருமகன் ருக்மன் சேனநாயக்கா அதன் மையப்புள்ளி. அரசாங்கத்திலை இப்ப இருக்கிற ஒரு பெரிய புள்ளியும் அவற்றை ஆதரவாளர் மாரும் சந்தர்ப்பம் வரயிக்கை அங்காலை தாவல் செய்வினம் என்பதும் ஒரு சங்கதி!

* * *

போனகிழமை பங்களாதேஷிலை பல நாட்டுக் கவிஞர்கள் ஒன்று கூடும் மாநாடு ஒண்டுநடந்தது அதுக்கு இலங்கைக் கவிஞர்கள் போனார்கள் இரண்டுபேரும் சிங்களக் கவிஞர்கள் ஒரு தமிழ்க் கவிஞரோ, முஸ்லிம்கவிஞரோ சேர்க்கப்படவில்லை. இது சிங்களநாடு சிங்களக் கவிஞர்கள் தான் இஞ்சை இருக்கினம் எண்டு வெளி உலகத்துக்குக் காட்டவோ......?

தமிழ்க்கவிஞர்கள் விடுபட்டதைப் பற்றிக் கேட்க ரோஷமுள்ள தமிழன் எவனும் பார்லிமென்டிலை இல்லையே! ரோஷமுள்ள முஸ்லிம் எம்.பி ஒருவராவதுஇருக்கிறாரா எண்டு பொறுத்திருந்து தான் பாக்க வேணும்! பராபரமே.



குடாநாட்டில்

தொழிற்சாலைகள் மூடப்படுகின்றன

பலகோடி ரூபா முதலீடு முடங்கியது ஆயிரக்கணக்கானோர் வேலையிழப்பு

யாழ்ப்பாணம், பெப். 3

வடபகுதி மீதான அரசின் பொருளாதார, எரிபொருள் தடைகளால் குடாநாட்டுக்குள் உள்ள பல தொழிற்சாலைகள் இழுத்து மூடப்படுகின்றன.

இதனால் பல்லாயிரக்கணக்கான தொழிலாளர்கள் வேலை இழந்துள்ளனர்.

கோடிக்கணக்கான ரூபா முதலீடுகள் முடங்கிக் கிடக்கின்றன.

கண்ணாடித் தொழிற்சாலை

இவற்றுள் பெரிதும் பாதிப்படைந்துள்ளவை குடாநாட்டிலுள்ள கண்ணாடித் தொழிற்சாலைகளாகும்

இவற்றுக்குத் தேவையான சூளை எண்ணெய்யை (குருடொயில்) கொண்டுவர இராணுவ பிரிகேடியர் அனுமதி வழங்க மறுத்துள்ளார்.

ஒரு கண்ணாடித் தொழிற்சாலைக்கு தினசரி 10 பீப்பாய்கள் எண்ணெய் தேவை.

எண்ணெய் கிடைக்காததால் ஆயிரக்கணக்கான தொழிலாளர்கள் வேலை இழந்துள்ளனர்.

மேலும் இத்தொழிற்சாலையின் உட்புறச்சூழல் வெப்பநிலைசீராகப் பேணப்படவேண்டும்.

இதற்காக இயந்திரங்கள் நிறுத்தப்படாமல் அவை தொடர்ச்சியாக இயங்கவேண்டும்.

தொழிற்சாலை இயந்திரங்கள் நிறுத்தப்பட்டுள்ளதால், மீண்டும் வேலை ஆரம்பிக்கும் பட்சத்தில் ஒரு மாதத்தின் பின்பே உற்பத்திவேலைகள் ஆரம்பிக்கலாம்.

இதனால் மேலும் இழப்பு ஏற்பட்டிருக்கிறது.

அலுமினிய தொழிற்சாலை

அலுமினியத் தொழிற்சாலைக்கு தேவையான அலுமினியத் தகடுகளை அரசு குடாநாட்டுக்குள் எடுத்துச் செல்வதைத் தடை செய்துள்ளது.

போராளிகள் இதனைப் பாவித்து கிரனேட், ஷெல் போன்ற ஆயுதங்கள் செய்கிறார்கள் என அரசு எண்ணுவதே இதற்குக் காரணம்.

இதனால் பல அலுமினியத் தொழிற்சாலைகள் மூடப்பட்டு தொழிலாளர்கள் பட்டினி கிடக்கும் நிலைக்கு தள்ளப்பட்டுள்ளனர்.

வார்ப்புத் தொழிற்சாலை

நீர் இறைக்கும் இயந்திரங்கள், வாகன உதிரிப்பாகங்கள் என்பன உருக்கி வார்க்கும் தொழிற்சாலைகளும் மூடப்படுகின்றன.

இவற்றிற்கு தேவையான 'பேணஸ் ஒயில்'' எண்ணெய்யும் குடாநாட்டுக்குள் கொண்டுவர முடியாதுள்ளது.

இதனால் பல இயந்திர உதிரிப்பாகங்களுக்கு தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது.

பட்டறைகள்

குண்டுப்புரளிகளால் கடந்த பலமாதங்களாக கொழும்பிலிருந்து காஸ் சிலிண்டர்கள் வருவதும் வெற்றுச் சிலிண்டர்கள் அனுப்புவதும் தடை செய்யப்பட்டுள்ளது.

பட்டறைகள், தொழிற்சாலைகள் பலவற்றிற்கு ஒட்சிசன், அசற்றலின் சிலிண்டர்கள் கட்டாய தேவையானவை

இவை இல்லாததால் பல வாகனங்கள் ஒட்டை உடைசலுடன் வீதிகளில் ஓடவேண்டி உள்ளன.

இவ்வேலைத்தலங்களில் தொழில்புரிந்த தொழிலாளர்களும் தற்போது வேலையிழந்துள்ளனர். (உ-5)

எரிபொருள் தடை அகற்றக் கோரி அரச அதிபரிடம் மகஜர்

யாழ்ப்பாணம்,பெப்.3

வடபகுதி மீதான எரிபொருள் தடை உடனடியாக அகற்றப்பட வேண்டும் என்று கோரும் மகஜர் ஒன்றை நேற்று யாழ் அரச அதிபரிடம் மனித உரிமைகளுக்கான வெகுஜன இயக்கத்தின் கோப்பாய் பிரதேசக் கிளை சமர்ப்பித்தது.

கோப்பாய் பிரதேச உதவி அரசாங்க அதிபர் ஊடாக இம்மகஜர் அரச அதிபரிடம் கையளிக்கப்பட்டது.

இயக்கத்தின் கோப்பாய்க்கிளைத் தலைவர் திரு. சி. சிவநேசன், செயலாளர் திரு ப. குமாரசிங்கம், பொருளாளர் திரு கா. கதிர்காமநாதன் ஆகியோர் கோப்பாய் உதவி அரச அதிபரிடம் மகஜரைக் கையளித்தனர். (இ-எ)

கொக்கட்டிச்சோலை இறால் வளர்ப்புப் பண்ணை படுகொலை பற்றி ராய்ட்டர்

கொழும்பு, பெப் 3

கொக்கட்டிச்சோலை இறால் வளர்ப்புப் பண்ணையில் வேலைசெய்து வந்த தமிழ் ஊழியர்களில் சிலர் பொலீஸ் கொமாண்டோக்களினால் சுட்டுக் கொல்லப்பட்டதை பண்ணையின் நிர்வாக இயக்குநர் திரு. விக்டர் சந்தியாப்பிள்ளையும் ஊர்ஜிதம் செய்தார்.

ராய்ட்டர் செய்தி ஸ்தாபனம் இச்செய்தியை அறிவித்தது

ஹொங் கொங்கில் பதிவு செய்யப்பட்ட அமெரிக்கா, பிரிட்டிஷ், மேற்கு ஜேர்மன் நிறுவனங்களுடன் சேர்ந்து இலங்கையர் சிலரால் ஆரம்பிக்கப்பட்டதே செரண்டிப் கடல் உணவு நிறுவனம்.

இந்த நிறுவனமே கொக்கட்டிச்சோலை இறால் வளர்ப்புப் பண்ணையை நடத்திவந்தது (இ-)எ

வெளிநாட்டு...

(4ம் பக்கத் தொடர்ச்சி)

இவர் பணம் வாங்கிய தன் பின் தலைமறைவாகி விட்டாராம்.

இதனையடுத்து ஆத்திரமடைந்த இளைஞர்களே இந்த நடவடிக்கையில் இறங்கினர் என்று சொல்லப்படுகிறது.

வெளிநாட்டுக்கு அனுப்ப முடியாது போனால் பணத்தை குறிப்பிட்ட திகதியில் மீளளிப்பதாகவும் தவறும் பட்சத்தில் தமது வீடு, வீட்டில் உள்ள தளபாடங்கள் அனைத்தையும் சம்பந்தப்பட்ட இளைஞர்களிடம் கொடுப்பதாகவும் தெரிவிக்கும் கடிதங்களை இளைஞர்களிடம் இந்த மூவர் கொடுத்திருந்தார் என்றும் கூறப்படுகிறது. (இ-10)

முச்சக்கர

(1ம் பக்கத் தொடர்ச்சி)

பட்டனர்.

ஆணையாளர் திரு சிவஞானம் மேலும் பேசுகையில் சொன்னதாவது;

குருநகர்ப் பகுதியில் சுகாதார சீர்கேட்டுக்குக் காரணியாக இருக்கின்றது வடிகால்வாய்கள் பிரச்சினை.

இதைத் தீர்த்துவைக்க 87 லட்சம் ரூபா செலவில் வடிகால்கள் சீரமைப்பு யுனிசெப் திட்டத்தின் உதவியுடன் செயற்படுத்தப்படும்.

இத்திட்டம் நிறைவேறியதும் குருநகரின் பாரிய சுகாதாரப் பிரச்சினைகள் தீர்க்கப்பட்டுவிடும்.

சனசமூக நிலையத்தின் நீண்ட நாள் கோரிக்கையான விளையாட்டு மைதானக் கோரிக்கையும் தீர்க்கப்படும்.

யாழ் கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலைக்கு அருகில் அரசினரால் கைவிடப்பட்டுள்ள காணித்துண்டு ஒன்று விளையாட்டு மைதானமாக மாற்றப்படும்.- இப்படி ஆணையாளர் சொன்னார்

நிலையத்தைச் சூழ உள்ள பகுதிகளில் தேங்கிக் கிடந்த குப்பைகள் யாவும் சிரமதான பணி மூலம் அகற்றப்பட்டு எரிக்கப்பட்டன

குப்பைகளை எரித்து சுகாதாரத்தைப் பேணுங்கள்' என்னும் தலைப்பிலான துண்டுப்பிரசுரமும் குடியிருப்பாளருக்கு வழங்கப்பட்டது (இ-எ)

வடக்கே சென்று

துப்பாக்கி ஏந்தி போராடும் மக்களுடன் பேசுவேன் என்கிறார் ஆரியரத்ன

கொழும்பு, பெப் 3

நான் வடபகுதிசெல்ல இருக்கின்றேன். அங்கு துப்பாக்கி ஏந்திப் போராடும் மக்களுடன் நான் பேசுவேன்.

சர்வோதயத் தலைவர் டாக்டர் ஏ டீ. ஆரியரத்ன மேற்கண்டவாறு தெரிவித்தார்.

கண்டியில் நடந்த ரோட்டரி மாவட்ட மாநாட்டில் டாக்டர் ஆரியரத்தின பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டார்.

இன்னும் சில வாரங்களில் யாழ்ப்பாணம் செல்ல இருப்பதாகவும் டாக்டர் ஆரியரத்ன சொன்னார்.

டாக்டர் ஆரியரத்ன இம்மாதம் 15ஆம் திகதி அளவில் வடபகுதி விஜயத்தை மேற்கொள்ள விருப்பதாக சர்வோதய வட்டாரங்கள் தெரிவித்தன. (இ-எ)

அடுத்த நடவடிக்கை பற்றி முடிவு செய்யப்படும்

சென்னை பெப் 2

இந்தி எதிர்ப்பு இயக்கத்தின் அடுத்த கட்டம் பற்றி தி மு க பொதுக் குழு கூடிமுடிவு செய்யும்

சென்னை மத்திய சிறையிலிருந்து விடுதலையான பின் தி மு க தலைவர் கலைஞர் மு. கருணாநிதி முன்கண்ட தகவலை செய்தியாளர்களிடம் வெளியிட்டார்.

மொழிப் பிரச்சினைக்கு தீர்வு காணும் நடவடிக்கையை இந்திய மத்திய அரசும் பிரதமரும் மேற்கொள்ளவேண்டும் என்றும் திரு கருணாநிதி கேட்டுக் கொண்டார்.

இந்திய அரசியல்சட்ட நகலை எரித்த வழக்குத் தீர்ப்புக்கு எதிராக அப்பீல் செய்வது குறித்து சட்டத்துறை ஆலோசகர்கள் ஆராய்ந்துகொண்டிருக்கின்றனர் - இப்படி திரு. கருணாநிதி மேலும் சொன்னார் (இ-எ)

பாகிஸ்தான் ஷெல் அடிக்கிறது

புதுடில்லி,பெப்.3

பாகிஸ்தான்படைகள், இந்திய ஜம்மு எல்லையில் நேற்று ஷெல் தாக்குதலை நடத்தின.

இதனைத் தொடர்ந்து இந்திய எல்லைக்குள் உள்ள எல்லைப்புறக் கிராமங்கள் சிலவற்றில் வாழும் மக்கள் இந்திய அதிகாரிகளினால் அப்புறப்படுத்தப்பட்டனர். (இ-எ)

புனருத்தாரணம்

நீர்வேலி, பெப்.3

நீர்வேலி அருள்மிகு சிவ —காமாட்சியம்பாள் ஆலயத்தில் புனரமைப்புக்கான வேலைகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன.

பழைய கட்டடங்களை இடித்துத் துப்புரவுசெய்யும் வேலைகள் சிரமதானம் மூலம் நடைபெறுகின்றது. (உ-110)

எரிபொருளில் கலப்படம்!

யாழ்ப்பாணம், பெப். 3

அரசின் எரிபொருள் கெடுபிடியால் வடபகுதியிலுள்ள எரிபொருள் விற்பனையாளர்கள் பலர் எரிபொருளில் கலப்படம் செய்கிறார்கள்.

இதனால் 'ரினர்' எனப்படும் எரிதிரவத்திற்கு வடக்கில் தட்டுப்பாடு நிலவுகிறது.

இதையே கலப்படத்திற்கு விற்பனையாளர்கள் பயன்படுத்துகின்றனர் என்று கூறப்படுகிறது.

இவ்வாறு கலப்படம் செய்யப்படுவதால் வாகனங்கள் இயந்திரக் கோளாறுகளுக்கு உள்ளாகின்றன!

பொதுமக்கள், பாதசாரிகள் வீதிகளில் நடமாட முடியாதபடி வாகனங்களில் இருந்து புகை வெளியேறுகின்றது

வாகனங்களின் உதிரிப்பாகங்கள் விரைவில் இதனால் பழுதடைகின்றன என்று ஒரு வாகன உரிமையாளர் தெரிவித்தார். (உ-5)

வட பகுதிக்கு கிடைக்க வேண்டிய ரூ. 20 லட்சம் கோட்டை

யாழ்ப்பாணம், பெப், 3

வீடமைப்பு அதிகார சபை யாழ் மாவட்டத்திற்கென சென்ற வருடம் ஒதுக்கியிருந்த நிதியில் 20 லட்சம் ரூபா அசமந்தத்தால் வடபகுதிக்கு கிடைக்காமல் போய்விட்டது

சென்றவருடம் அதிகாரசபை 90 லட்ச ரூபாயை யாழ் மாவட்டத்திற்கென ஒதுக்கியிருந்தது.

மாதாந்தம் இங்கிருந்து வரவு செலவு கணக்கு கொழும்புத் தலைமையகத்துக்கு செல்லவேண்டும். அப்படிச் சென்றால் தான் மாதா மாதம் அங்கிருந்து பணம் பகுதிபகுதியாக அனுப்பப்படும் இதுதான் வழமையான நடைமுறை.

ஆனால் இங்கு உள்ள அதிகாரிகளின் அசமந்தத்தால் சென்றவருடக் கணக்குகள் உரியபடி கொழும்பு போய்ச் சேரவில்லை என்று தெரிவிக்கப்படுகிறது.

இதனால் 20 லட்சம் [illegible] வடக்கிற்கு அனுப்பவில்லை.

''வடபகுதியில் விடெரிக்கும் அரசு, வீடமைக்க அனுப்பும் சிறு தொகைப் பணத்தைக் கூட இங்குள்ள அதிகாரிகள் கோட்டை விடுகிறார்களே!'' என அங்கலாய்த்தார் வீடமைப்புக் கடனுக்காக விண்ணப்பித்த ஒருவர். (உ-5)

தகவல்: வீடமைப்பு திணைக்கள உதவி ஆணையாளர்.

கண்டித்து தீர்மானம்

யாழ்ப்பாணம்,பெப்.3

வட பகுதிமீதான எரிபொருள் தடையைக் கண்டித்து புத்தூர் கலைமதி சனசமூக நிலையம் தனது 13 ஆவது வருடாந்தப் பொதுக் கூட்டத்தில் தீர்மானம் நிறைவேற்றியுள்ளது.

திரு கா. கதிர்காமநாதன் கூட்டத்திற்குத் தலைமை வகித்தார் (இ-எ)

பஸ் குண்டு...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

முயற்சியில் அரசு ஈடுபட்டுள்ளது

எரிபொருள் தடையை நீக்கும்படி திரு. சூசைதாசன் விடுக்க வேண்டுகோளை ஜனாதிபதி ஜெயவர்த்தன நிராகரித்து விட்டதாக கடந்த மாதம் 17 ஆம் திகதி வெளியான 'டெயிலி நியூஸ்' பத்திரிகை அறிவித்தது.

இந்த நிலையில் சிறிய தமிழர் அமைப்புக்கள் தென் இலங்கையில் பொதுமக்கள் மீது விரக்தி நிலையில் தாக்குதல்களை மீண்டும் ஆரம்பித்துள்ளன.

தெற்கில் போராட்ட நடவடிக்கைகள் இல்லாமையை ஈடு செய்ய இப்படியான வன்செயல்கள் நடத்தப்படுகின்றன.

தொழிலாளர் வர்க்கத்துடன் இணைந்து இடதுசாரி இயக்கம் மேற்கொண்டு வரும் எதிர்ப்பு இயக்கம் தென் இலங்கையில் மெதுவாகவே வளர்ந்து வருகின்றது இதனை நாம் ஏற்றுக் கொள்கிறோம்?

புத்திசாலித்தனம் அல்ல

ஆனால் தமிழ்ப் போராளிகள் தென் இலங்கையில் பயங்கரவாதத் தந்திரத்தை உபயோகிப்பது புத்திசாலித்தனமாகாது.

பதுளைச் சம்பவம் குறித்து அரசின் முதலைக் கண்ணீரை நாம் பகிரங்கப்படுத்த வேண்டியுள்ளது. பதுளைச் சம்பவத்திலும் பார்க்க பெரிய அளவிலான பயங்கரவாத நடவடிக்கைகளை அப்பாவித் தமிழ் மக்கள் மீது அரசு மேற்கொண்டு வருகின்றது.

பஸ் பயணிகள் மீது இருந்தாற்போல் நடத்தப்படும் தாக்குதலிலும் பார்க்க யாழ் குடாத் தமிழரை மெதுவாகக் கொல்வதைக் குறைந்த தீமையாகக் கணிக்க முடியாது.

அரசுக்கு எதிராக வடக்கிலும் தெற்கிலும் மக்களைத் தலைமை வகித்து நடத்தும் பொறுப்பில் இடதுசாரி இயக்கம் முன்னேற்றம் காண வேண்டும். இதைத்தான் இச்சம்பவங்கள் உணர்த்துகின்றன.

எல்லாத் தரப்பிலும் இருந்து வரும் குருட்டுப் பயங்கரவாதத்தையும் இராணுவ வெறியாட்[illegible] இதுவே ஒரே வழி.

—இப்படி [illegible] கையில் கூறப்பட்டுள்ளது. (உ-எ)

முந்திரிகை...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

நடைபெற்றது.

காலை முதல் மாலை வரை சண்டை நடைபெற்றுக் கொண்டிருந்ததாகத் தெரிவிக்கப்படுகிறது

சிப்பாய்களினால் கைவிடப்பட்ட எஸ் எல் ஆர்., ஏ. கே. போன்ற பல ஆயுதங்களும் புலிகளினால் மீட்கப்பட்டன

பல கவச வண்டிகள் [illegible] பின்னோக்கிச் சென்று [illegible] பதாகத் தெரிவிக்கப்படுகிறது (இ-10)

வாகனப்---

(1ம் பக்கத் தொடர்ச்சி)

வரும் முயற்சியில் வர்த்தகர் குழு ஒன்று நேற்று ஆனையிறவு இராணுவ முகாமுக்கு சென்றது.

ஏற்கனவே சிப்பாய்களினால் லொறிகளினால் இருந்து இறக்கப்பட்ட பல பொருள்கள் கரையில் ரயில் பாதை ஓரங்களில் இடப்பதாகவும் தெரியவருகிறது.

இப்பொருள்களின் பெறுமதி பல லட்சம் ரூபா என மதிப்பிடப்படுகிறது. (அ-10)

எந்தச்சவா---

(1ம் பக்கத் தொடர்ச்சி)

சொல்லமுடியாதுள்ளது,

இன்றைய போராட்டத்தில் மக்களும் இணைந்துபோராடவேண்டும்.

இப்படி திரு. கிட்டு மேலும் சொன்னார்.

தீர்க்காதுரந்தரிசெல்வி தங்கம்மா அப்பாக்குட்டியும் பேசினார். (இ-எ-68)

அழைத்தால்--

(1ம் பக்கத் தொடர்ச்சி)

கடி விஜயம் செய்வதை விடுத்து இந்தியத் தலைவர்கள் யாழ்ப்பாணத்துக்கு விஜயம் செய்ய வேண்டும்

யாழ் நிலைமையை அறிந்து கொள்ள இந்திய தலைவர்கள் யாழ்ப்பாணத்தில் உள்ள மக்கள், பிரஜைகள் குழுக்களின் உறுப்பினர்கள். தமிழீழ விடுதலைப் புலிகள் ஆகியோரைக் கண்டு பேசவேண்டும்.

இப்படி டாக்டர் பாலசிங்கம் தெரிவித்தார் என்று டெக்கான் ஹெரால்ட்மேலும் தெரிவித்தது. (இ-எ)

சிறுவர் வட்டம்

சாவகச்சேரி, பெப். 3

அறவழிப் பாலர் பாடசாலைகள் அமைந்துள்ள 40கிராமங்களிலும் அறவழி வாசகர்சிறுவர் வட்டங்களை ஆரம்பிப்பதற்கு இயக்குநர் திரு இ.பேரம்பலம் முயற்சிகளை மேற்கொண்டுள்ளார்.

இவ்வட்டங்கள் இம்மாதம் 7ஆம் திகதியன்று ஆரம்பித்து வைக்கப்படுமெனத் தெரிவிக்கப்படுகிறது. (உ-81)

இப்பத்திரிகை யாழ்ப்பாணம், மின்சார நிலைய வீதி. இரண்டாம் ஒழுங்கை 15 - ஆம் இலக்கத்தில் உள்ள உதயன் பப்ளிகேஷன்ஸ் (பிறைவேட்) லிமிட்டெட் நிறுவனத்தாரால் அவர்களது அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது. வெளியிட்ட திகதி 03 - 02 - 1987 தொலைபேசி இல. 24805, 23075

Printed and Published by Uthayan Publications (Private) Ltd., 15 Second Lane, Power House Road, JAFFNA Registered as a News - paper at the General Post Office Sri Lanka Under Number QJ 60 N 86 Telephone. 24805, 23075